E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

மின்னிதழ்

2023 மே 6 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 106 | Saturday 06, May, 2023 | 12பக்கங்கள் | 50/-

## ஜப்பானில் 6.3 ரிச்டர் பூகம்பம்

### சுனாமி எச்சரிக்கை



ஜப்பானில் நேற்று 6.3 ரிச்டர் அளவிலான பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஜப்பானின் இஷிகவா பிராந்தியத்தில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக, ஜப்பானிய 06

## தொல்பொருள் வரலாற்று சின்னங்களாக ஏழு சிவாலயங்கள் அடையாளம்

### வரலாற்றை ஆராய்ந்து பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க தீர்மானம்



இலங்கையில் பிரசித்தி பெற்ற சிவாலயங்களின் வரலாற்றை ஆராய்ந்து, அந்த ஆலயங்களை தொல்பொருள் அடையாளங்களாக பாதுகாப்பதற்கு தீர்மானித்துள்ளதாக, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நகுலேஸ்வரம், திருகேதீச்சரம், திருகோணேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம் (புராதன பெயர் சந்திரசேகரேஸ்வரம்), ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் உள்ளிட்ட சிவாலயங்கள் தொடர்பில் ஆராய 06

## 03ஆம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா இன்று



### பிரிட்டனில் விழாக்கோலம்; ஜனாதிபதி பாரியாருடன் பங்கேற்பு

பிரிட்டனின் மூன்றாவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா இன்று சனிக்கிழமை (06) நடைபெறவுள்ளதுடன், பிரிட்டன் விழாக்கோலம் பூண்டுள்ளது. இதில் பங்கேற்பதற்காக உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பிரிட்டனைச் சென்றடைந்தார்.

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் செண்டரா பெரேரா மற்றும் 06



கொழும்பில் ஜனாதிபதி செயலகம், ஷங்ரிலா பசுமை மைதானம் பகுதிகள் 'புத்த ரஷ்மி' வெசாக் வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து ஜனாதிபதி மாளிகையை கண்டுகளிக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் ஜனாதிபதி மாளிகையை பார்வையிட சென்றபோது பிடிக்கப்பட்ட படம்.

2009ஆம் ஆண்டு லாகூரில் இலங்கையின்

## கிரிக்கெட் அணியை தாக்கிய 'இக்பால்' துவக்கு சூட்டில் பலி!



பாகிஸ்தானின் லாகூர் நகரில் 2009ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புடைய இக்பால் என்று அழைக்கப்படும் பாலி கயாரா எனும் தீவிரவாதி, பாகிஸ்தான் பொலிஸாரின் எதிர்பாராத துப்பாக்கிப் பிரயோகத்தில் (என்கவுன்டரில்) கொல்லப்பட்டுள்ளார். 06

## A/L விடைத்தாள் திருத்தும் பணிகள் திங்கள் முதல்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்று தெரிவிப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகுமென, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்று தெரிவித்தார்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள விடைத்தாள் மதிப்பீடு செய்யும் செயற்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் மேலும் மத்திய நிலையங்களை உருவாக்கி விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை துரிதப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட தாம் தயாரென, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

இதன்படி, உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு சபை நேற்று முன்தினம் (04) பிற்பகல் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தது. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிக்கும் எந்த நேரத்திலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ள தயாராக இருப்பதாக, பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னஹக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது வெளிநாட்டுப் பயணத்தை நிறைவு செய்து, நாடு திரும்பியதன் பின்னர் கலந்துரையாடல் நடத்தப்படுமென ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிவித்தலின் பிரகாரம், மக்களின் குரலுக்கு செவி சாய்ப்பதுடன், 06



### பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனமும் விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட சம்மதம் தெரிவிப்பு

## கொவிட் தொற்று குறித்து மிகைப்படுத்தப்படும் செய்திகள்

### உண்மை இல்லை என சுகாதாரப் பிரிவு தெரிவிப்பு



நாட்டில் கொவிட்19 தொற்று அதிகரித்து வருவதாக ஊடகங்களில் தெரிவிக்கப்படும் அளவுக்கு அதில் உண்மையில்லை என்பதுடன், தொற்றாளர் இனம் காணப்பட்டாலும், அது எச்சரிக்கையான நிலை என்று தெரிவிக்க முடியாது.

என்றாலும், கொவிட்19 தொற்று இன்னும் முழுமையாக உலகிலிருந்து நீங்கவில்லை என்பதால் அதன் பாதிப்பு தொடர்ந்து இருந்து வருவதாக, சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பிரதானி, விசேட வைத்திய நிபுணர் சமித கினிகே தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற 06

## இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பில் அதிகரிப்பு

### 2,755 மில். டொலர்களாகியதாக அறிவிப்பு



இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு கடந்த ஏப்ரல் மாதத்தில் 2 ஆயிரத்து 755 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்தில் உத்தியோகபூர்வ கையிருப்பு 2 ஆயிரத்து 694 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்பு ஏப்ரல் மாதம் 2.2 சதவீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாக, தரவுகள் தெரிவிக்கின்றன. 06

## ஷாப்டர் குடும்பத்தவரின் மடிக்கணினி பகுப்பாய்வு

### அறிக்கையை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு



தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணைகளுக்கு வசதியாக அவரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் பயன்படுத்திய மடிக்கணினிகள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரச பகுப்பாய்வாளருக்கு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். 06

சீரற்ற காலநிலை தொடர்கிறது

## ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



பதுளை, காலி, கேகாலை, மாத்தளை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தினால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி மேற்கண்ட ஐந்து மாவட்டங்களிலும் பின்வரும் இடங்களுக்கு மஞ்சள் மற்றும் செம்மஞ்சள் நிற நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஹல்துமுல்ல, ஹாலிஎல, பத்தேகம, யக்கலமுல்ல, பல்லேபொல, பசறை, எல்பிட்டிய, நாகொட, 06

சிரேஷ்ட இசைக்கலைஞர் கலாபூஷணம்

## M.S.செல்வராஜா மாஸ்டர் காலமானார்

### நாளை பொரளையில் இறுதிக்கிரியை



இலங்கையின் தமிழ், சிங்கள மெல்லிசை, சாய் பஜன், பொப்பிசை, திரையிசைப் பாடகரும் இசை ஆசிரியருமான இசையமைப்பாளர் கலாபூஷணம் எம்.எஸ்.செல்வராஜா மாஸ்டர் நேற்று (05) தனது 85ஆவது வயதில் காலமானார்.

நீண்டகாலமாக உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த அவர், தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை 06

வெசாக் தினமான நேற்று

## 988 சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கல்

### ஆறு பெண் கைதிகளும் உள்ளடக்கம் என தெரிவிப்பு



வெசாக் தினத்தையிட்டு 28 சிறைச்சாலைகளிலிருந்து 6 பெண்கள் உட்பட 988 கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் நேற்று (05) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நீதி அமைச்சர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம், அரசியலமைப்பின் 34ஆவது சரத்தில் ஜனாதிபதிக்கு 06



## 'பௌத்தாலோக மத அனுஷ்டான நிகழ்ச்சி' ஷங்ரிலா பசுமை மைதானத்தில் வெசாக்

1,200 மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைப்பு 03

## 12 இலட்சம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் இருவர் நேற்று கைது!

யாழ்.விசேட நிருபர்



12 இலட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி போலி நாணயத்தாள்களுடன் இந்தச் சந்தேகநபர்கள் பயணிப்பது தொடர்பில் இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, ஆனையிறவு பகுதியில் இவர்களை வழிமறித்துச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, இவர்களிடமிருந்து 06

## ஆட்டோ சாரதிகளை மயக்கி கொள்ளை

### யாழில் பெண் உள்ளிட்ட குழு கைவரிசை



யாழ். விசேட நிருபர்

முச்சக்கரவண்டிகளை வாடகைக்கு அமர்த்தி அவற்றினுடைய சாரதிகளின் தங்கநகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்துச் செல்லும் பெண் உள்ளிட்ட மூவர் கொண்ட கும்பலை யாழ். பொலிஸார் தேடி வருகின்றனர்.

சாரதிகளை மயக்கமடையச் செய்து ஒரே நாளில் இரண்டு முச்சக்கர வண்டிகளின் சாரதிகளிடமிருந்து நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, 06

## கஜூகமவில் இரு பஸ்கள் நேருக்குநேர் மோதி விபத்து

### 23 பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதி



கொடதெனிய குறூப், வெயாங்கொட விசேட நிருபர்கள்

கொழும்பு-கண்டி பிரதான வீதியில் கஜூகம பகுதியில் தனியார் பயணிகள் பஸ்ஸொன்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 23 பேர் காயமடைந்துள்ளதாக, நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியிலிருந்து நீர்கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும் கொழும்பிலிருந்து மூதூர் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி இவ்விபத்துச் சம்பவித்தது. 06

# சர்வதேச செய்திகள்

## பெருவில் வலது கால் காலணிகளை மாத்திரம் திருடிய வினோதத் திருட்டு



பெருவில் 3 திருடர்கள் கடைக்குள் புகுந்து 200க்கும் மேலான காலணிகளைத் திருடியுள்ளனர். எனினும் அவர்கள் திருடிய அனைத்து காலணிகளும் வலது காலுக்கான காலணிகள் என்பதால் எவருக்கும் பயனில்லாமல் போயுள்ளது.

ஹுவாங்காயோ நகரில் இந்த சம்பவம் நடந்திருப்பதாக பி.பி.சி செய்தி நிறுவனம் கூறியது.

திருடப்பட்ட காலணிகளின் மதிப்பு சுமார் 13,000 டொலருக்கும் மேல் இருக்கும் எனக் கடை உரிமையாளர் கூறினர்.

அந்தத் திருட்டுச் சம்பவம் கடையில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கெமராக்களில் பதிவாகியுள்ளது.

திருடர்கள் நடு இரவில் பூட்டை உடைத்து, கடைக்குள் புகுந்து காலணிகளைத் திருடியதாகவும் 3 சக்கர சைக்கிளில் அந்த இடத்தை விட்டுத் தப்பித்ததாகவும் வீடியோ காட்டியது.

“கிடைத்த ஆதாரத்தை வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்துவிடுவோம்” எனப் பெரு பொலிஸார் உறுதியளித்தனர்.

“சம்பவ இடத்தில் இருந்து நாம் ஆதாரங்களை சேகரித்துள்ளோம்.

இதில் அசாதாரணமான விடயம் என்னவென்றால், வலது கால் பாதணிகள் மாத்திரமே திருடப்பட்டிருக்கின்றன.

வீடியோ காட்சிகள் மற்றும் கைவிரல் அடையாளங்களுடன் அந்த ஆட்களை அடையாளம் காண முடியுமாக இருக்கும்” என்று உள்ளூர் பொலிஸ் தலைவர் எடவான் டயஸ் பெரு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

## செர்பியாவில் 2ஆவது துப்பாக்கி சூட்டு சம்பவம்: எட்டு பேர் பலி



செர்பியாவில் பாடசாலை ஒன்றில் சிறுவன் ஒருவன் துப்பாக்கிச் சூடு நடத்திய அடுத்த நாளில் இடம்பெற்ற மற்றொரு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் எட்டுப் பேர் கொல்லப்பட்டு மேலும் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

செர்பிய தலைநகரின் தெற்காக உள்ள சிறு நகர் ஒன்றில் ஓடும் கார் வண்டியில் இருந்த துப்பாக்கிதாரி வீதியில் செல்பவர்கள் மீது கண்மூடித்தனமாக சூடு நடத்தியுள்ளார். இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

21 வயதான ஆடவர் தானியக்க துப்பாக்கியைக் கொண்டு இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதோடு தாக்குதல் இடத்தில் இருந்து தப்பிச் சென்ற சந்தேக நபரை பொலிஸார் தொடர்ந்து தேடி வருவதாக ஆர்.டீ.எஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் ஒரு பயங்கரவாதச் செயல் என்று செர்பிய உள்துறை அமைச்சர் பிரடிஸ்லேவ் காசிக் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கடந்த புன்கிழமை பல்கிரேட்டில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சக மாணவர்கள் எட்டுப் பேரும் ஒரு பாதுகாப்பு அதிகாரியும் கொல்லப்பட்டனர். அந்த சம்பவம் செர்பியாவில் கடந்த பல ஆண்டுகளில் மோசமான துப்பாக்கிச் சூட்டு சம்பவமாக இருந்தது.

இதனைத் தொடந்து துப்பாக்கி உரிமையை மேலும் கட்டுப்படுத்துவதற்கு செர்பிய அரசு திட்டமிட்டுள்ளது.

கண்டிப்பான துப்பாக்கிச் சட்டங்கள் இருக்கும் செர்பியாவில் ஒப்பீட்டளவில் பாரிய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மிக அரிதாகவே இடம்பெறுகின்றபோதும் ஐரோப்பாவில் இவ்வாறான சம்பவங்கள் அதிகம் நிகழும் நாடாக உள்ளது.

1990களில் நீடித்த போர் மற்றும் பதற்ற சூழலை அடுத்து மேற்கு பால்கன் பகுதிகளில் சட்டவிரோத ஆயுதங்கள் அதிகரித்தன. 2019 இல் செர்பியாவில் தலா 100 பேருக்கு 39.1 துப்பாக்கிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டது. இது அமெரிக்கா மற்றும் மொன்டனிக்ரோவுக்கு அடுத்து உலகில் மூன்றாவது அதிக எண்ணிக்கையாகும்.

## குவாட் தலைவர்கள் மோடிக்கு பாராட்டு



குவாட் தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு இந்திய பிரதமர் நரேந்திய மோடியை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை இந்திய அவுஸ்திரேலிய புலம்பெயர் அமைப்பும் சிட்னியில் நடத்தவுள்ளது.

எதிர்வரும் மே 23 ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மோடி கலந்துகொள்ளவுள்ளார். மே 24 ஆம் திகதி நடைபெறவுள்ள குவாட் தலைவர்கள் மாநாட்டுக்கு முன்னரே இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக ஏற்கனவே 20,000க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் பதிவு செய்திருப்பதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## நேபாள கிராமங்களில் உணவு பற்றாக்குறை

நேபாள நாட்டின் சீனாவை ஒட்டியுள்ள எல்லையோரக் கிராமங்களில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தியுள்ள நேபாளத்தின் போட்கோலா கிராமிய மாநகராட்சி நிறுவனத் தலைவர் வாங் சேதர் போர்ட், அக்கிராமங்களின் உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் உணவு விநியோகத்தை ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கிராமங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவுத் தானியங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கு பல்வேறு அமைப்புகளும் தனிநபர்களும் ஆதரவு நல்கியுள்ளனர்.

## மூன்றாம் சார்ல்ஸின் முடிசூட்டு விழா இன்று



பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்ல்ஸின் முடிசூட்டு விழா இன்று (6) நடைபெறவுள்ளது.

லண்டன் பக்கிங்ஹாம் அரண்மணையில் நடைபெற உள்ள பிரமாண்ட நிகழ்ச்சியில் பல்வேறு நாட்டு தலைவர்கள், பிரமுகர்கள் பங்கேற்கின்றனர். பிரிட்டன் அரச குடும்பத்தில், ராணியர் அணியும் கோஹினூர் வைர கிரீடத்தை மூன்றாம் சார்ல்ஸ் மனைவி கமீலா அணிவது தவிர்க்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

அரச குடும்பத்தைத் தவிர்த்து இந்த விழாவுக்கு பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசுத்துறைத் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

எனினும் கடந்த 1953ஆம் ஆண்டு அரசி இரண்டாம் எலிசபெத்துக்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவை விட சிறிய நிகழ்ச்சியாகவும், மிகக் குறைந்த நேரமே நடைபெறும் நிகழ்வாகவும் இந்த விழா இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசரின் தலையில் கிரீடம் சூட்டப்படும் ஒரு மதம் சார்ந்த வழக்கமான நிகழ்ச்சியே முடிசூட்டுதல் எனப்படுகிறது.

அது இங்கிலாந்து திருச்சபையின் தலைவர் என்ற அங்கீகாரத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதுடன், இந்த உரிமை மற்றும் அதிகாரங்களை அரசருக்கு மாற்றும் நிகழ்ச்சியாகவும் இருக்கும்.

இதற்கிடையே இந்த முடிசூட்டு விழாவை முன்னிட்டு 8ஆம் திகதி பொதுவிடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

முடிசூட்டு விழாவை மக்கள் கொண்டாடுவதற்கு ஏதுவாகவே இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

மேலும் விண்ட்சர் கோட்டையில் 7ஆம் திகதி 20,000 பார்வையாளர்களைக் கொண்ட மாபெரும் இசை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் உள்ள மதுபான விடுதிகள், பொழுதுபோக்கு விடுதிகள்; நேற்று மற்றும் இன்றைய தினங்களில் கூடுதலாக இரண்டு மணிநேரம் திறந்திருக்கவும் அனுமதியளிக்கப்பட்டது.

நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளை வடிவமைத்து நடத்துமாறு பொதுமக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## எகிப்தில் லொறி—பஸ் மோதி 25 பேர் பலி



எகிப்தின் தென் பகுதியில் உள்ள நெடுஞ்சாலை ஒன்றில் கனரக வாகனமும் பஸ் வண்டியும் மோதியதில் 25 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டின் சுகாதார அமைச்சு தெரிவித்தது. விபத்தில் 29 பேர் காயமுற்றனர். கார்கா, அஸ்யுட் நகரங்களை இணைக்கும் வீதியில் கடந்த வியாழக்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து இடம்பெற்ற பகுதியில் 17 அம்புலன்ஸ் வண்டிகள் அனுப்பப்பட்டு காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து நேர்ந்தது எவ்வாறு என்பது பற்றி தெளிவாகவில்லை. விபத்தை அடுத்து நெடுஞ்சாலையில் இரவு 8 தொடக்கம் காலை 7 மணி வரை கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு நிர்வாகம் தடை விதித்தது. எகிப்தில் பல வீதிகள் ஆபத்தான நிலைகளில் உள்ளன. அவை மோசமாகப் பராமரிக்கப்படுகின்றன.

அங்குள்ள வாகன ஓட்டுநர்கள் வேக வரம்புகளையும் போக்குவரத்து விதிமுறைகளையும் மீறுவது வழக்கம். 2021ஆம் ஆண்டில் போக்குவரத்து விபத்துகளில் 7,000 பேர் உயிரிழந்ததாக புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன.

## பாகிஸ்தான் மதப் பிரிவு மோதல்: பாடசாலை துப்பாக்கிச் சூட்டில் ஆசிரியர் உட்பட எண்மர் பலி



பாகிஸ்தானின் தொலைதூரப் பகுதியில் சுன்னி மற்றும் ஷியா முஸ்லிம்களுக்கு இடையில் நீடிக்கும் நீண்ட கால மோதல் வன்முறையாக வெடித்ததில் ஐந்து ஆசிரியர்கள் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

குர்ராம் மாவட்டத்தின் ஆப்கான் எல்லைக்கு அருகில் உள்ள டெரி மங்கால் நகரில் கடந்த வியாழனன்று (04) இரு துப்பாக்கிதாரிகள் பாடசலை ஒன்றுக்குள் நுழைந்து சூடு நடத்தியுள்ளனர். அன்றைய தினம் இடம்பெற்ற பரீட்சை தொடர்பில் ஆசிரியர்கள் பாடசாலையில் ஒன்று திரண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

“அவர்கள் ஷியாக்களை அடையாளம் கண்டு அவர்களை தனியாக வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்கள்” என்று மாவட்ட பொலிஸ் தலைவர் முஹமது இம்ரான் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் இருந்த ஐந்து ஆசிரியர்கள் மற்றும் இரு தொழிலாளர்கள் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சுன்னி ஆடவர் ஒருவரின் கார் வண்டி தாக்கப்பட்டதில் காயமடைந்த அந்த ஆடவர் மருத்துவமனையில் மரணித்து சில மணி நேரத்திற்கு பின்னரே இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இந்த இரு பிரிவினர்களுக்கும் இடையிலான பதற்றம் பல தசாப்தங்களாக நீடிப்பதோடு இவர்களால் இந்த மாவட்டம் இரண்டாக பிளவுபட்டிருப்பதாக முன்னாள் மாகாண பொலிஸ் தலைவர் அக்தர் அலி ஷா தெரிவித்துள்ளார்.

“ஷியா மக்கள் ஒரு பக்கம் வாழ்வதோடு மற்றப் பக்கத்தில் சுன்னிக்கள் வாழ்கின்றனர். சிறு சம்பவங்கள் கூட பெரும் மோதலை ஏற்படுத்தும் சூழலில் எப்போதும் அவதானத்துடன் இருக்க வேண்டி உள்ளது” என்று அவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் நால்வர் கொல்லப்பட்ட நிலையில் கடந்த மாதத்தில் மாவட்டத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

பதற்றத்தை தணிக்க சமூகத் தலைவர்களுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## செயற்கை நுண்ணறிவின் அபாயம் குறித்து பேச்சு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ், செயற்கை நுண்ணறிவின் அபாயங்கள் குறித்துப் பேச பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்களைச் சந்தித்துள்ளனர்.

கூகுள், மைக்ரோசொப்ட் போன்ற பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளைச் சந்தித்து எத்தகைய பாதுகாப்புக் கவசம் உள்ளது என்று அவர்கள் வினவினர்.

கமலா ஹாரிஸ் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பு நிறுவனங்களுக்கு இருப்பதாக வலியுறுத்தினார்.

சாட்–ஜி.பீ.டீ போன்ற தளங்கள் பற்றியக் கவலை அதிகரித்துள்ளது.

இதற்கிடையே அமெரிக்காவும் சீனாவும் செயற்கை நுண்ணறிவு ஆயுதப் போட்டியில் இறங்கியிருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

செயற்கை நுண்ணறிவின் தந்தை என்று அழைக்கப்படும் ஜெப்ரி ஹின்டன், அண்மையில் கூகுளில் தனது பணிக்கு விடைகொடுத்ததோடு, தனது பணிகளுக்காக வருந்துவதாகவும் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு சாட்பொட்ஸ்களின் சில ஆபத்துகள் சற்றுப் பயமுறுத்துவதாக உள்ளது என்று பி.பி.சி தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.

## பண்டை கால பதக்கத்தின் உரிமையாளர் கண்டுபிடிப்பு



20,000 ஆண்டுகளுக்கு முன் மானின் பல்லால் செய்யப்பட்ட சங்கிலிப் பதக்கத்தின் உரிமையாளர் யார் என்பது மரபணு சோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சைபீரியாவின் டெனிசோவா குகையில் கண்டுபிடிக்கப்பட்ட பதக்கத்தில் இருந்த மரபணு மாதிரிகளைக் கொண்டு அதன் சொந்தக்காரரை அடையாளம் காணமுடிந்ததாக நேச்சர் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டது.

பழங்காலப் பொருட்களின் சொந்தக்காரர் ஒருவர் மரபணு வழியாகக் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதன்முறை.

கற்காலத்தில் ரஷ்யாவின் அல்டாய் மலை அடிவாரத்தில் வாழ்ந்த வேட்டைக்காரர்களின் நெருக்கமான உறவினரான ஒரு பெண் பதக்கத்தை அணிந்திருக்கலாம் என்று கூறப்பட்டது.

அந்தப் பெண்ணே பதக்கத்தைச் செய்தாரா என்பது தெரியவில்லை.

ஆபரணத்தை அணிந்தபோது அவரது தோல் உயிரணு, வியர்வை, மற்ற உடல் திரவங்களில் இருந்த மரபணு, எலும்பு, பல், தந்தம் போன்றவற்றில் படிந்திருந்ததாகக் கூறப்பட்டது.

இந்தப் பதக்கத்தை கண்டுபிடித்த அகழ்வாராய்ச்சியின்போது முகக்கவசம் மற்றும் கையுறைகள் பயன்படுத்தப்பட்டதாலேயே அந்த மரபணுக்கள் அழியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளனமை குறிப்பிடத்தக்கது.

## சொந்த விமானத்தை வீழ்த்தியது உக்ரைன்



மத்திய கீவுக்கு மேலால் கட்டுப்பாட்டை இழந்து பறந்த தனது சொந்த ஆளில்லா விமானத்தை உக்ரைனிய விமானப்படை சுட்டுவீழ்த்தியுள்ளது.

ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை மாலை இந்த ஆளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்த விமானப் படை முயன்றத்தில் அந்தப் பகுதியில் 15 தொடக்கம் 20 நிமிடங்கள் வரை வெடிப்புகள் பதிவாகியுள்ளன.

ஆரம்பத்தில் எதிரிகளின் ஆளில்லா விமானமே சுட்டுவீழ்த்தப்பட்டதாக உக்ரைன் ஜனாதிபதியின் தலைமை பணியாளர் அன்ட்ரி யர்மக் குறிப்பிட்டிருந்தார். எனினும் ஆபத்தான நிலைமை ஒன்றை தவிர்ப்பதற்காக சொந்த ஆளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக விமானப் படை பின்னர் ஒப்புக்கொண்டது. இந்த ஆளில்லா விமானம் விழுந்ததில் எவருக்கும் அல்லது எந்த உடைமைக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்று குறிப்பிடப்பட்டது.

கிரம்ளின் மாளிகை மீது ஆளில்லா விமானத்தை அனுப்பி ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை கொல்ல உக்ரைன் முயற்சித்ததாக ரஷ்யா கடந்த புதன்கிழமை குற்றம்சாட்டிய நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மே 6 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.37 |
| லுஹர் | 12.09 |
| அஸர் | 03.27 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.32 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் சித்திரை 23

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# 'பௌத்தாலோக மத அனுஷ்டான நிகழ்ச்சி' ஷங்ரிலா பசுமை மைதானத்தில் வெசாக்

## 1,200 மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைப்பு



சுமார் மூவாயிரம் பாடசாலை மாணவர்களை சில் அனுஷ்டானத்தில் ஈடுபடுத்தும் நிகழ்வு நேற்று (05) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்பாகவுள்ள ஷங்ரிலா பசுமை மைதானத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தினால் இந்த பௌத்தலோக மத அனுஷ்டான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பு வலயத்திலுள்ள பல பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தி மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டதுடன், பிரதான பௌத்த பிரசங்கத்தை ஒலபொடுவ ரஜமஹா விகாரையின் தேரர் இத்தாலி மிலானோ லங்காராம விகாராதிபதி, மேல்மாகாண கொழும்பு களுத்துறைப் பிரிவின் பிரதம நீதிமன்ற சங்கநாயக்கருமான

06

# கடன் அழுத்தத்தில் உள்ள நாடுகளுக்கு அர்த்தமுள்ள கடன் நிவாரணப் பொதி

## உலக நாடுகளுக்கும் கடன் வழங்குநர்களுக்கும் அமைச்சர் அலி சப்ரி அழைப்பு



கடன் அழுத்தத்திலுள்ள நாடுகளுக்கு அர்த்தமுள்ள கடன் நிவாரணப் பொதியை ஒப்புக்கொள்ளுமாறு நாடுகளுக்கும் கடன் வழங்குபவர்களுக்கும், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அழைப்பு விடுத்துள்ளார்.

தென்கொரியாவின் இன்சியான் நகரில் ஆசிய வளர்ச்சி வங்கியின் 56ஆவது ஆண்டு கூட்டத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர், தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் தொடர்ந்து போராடும் நாடுகளுக்கான கடன் நிவாரணத் திட்டத்தில் அனைத்துப் பிரிவுகளும் ஒருமித்த கருத்துக்கு வர வேண்டும் என்றார்.

இதேவேளை, நாட்டின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் செயற்பாடுகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு தனது பாராட்டை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# கொடுக்கல், வாங்கல் பிணக்கில் கைதான நால்வருக்கு விளக்கமறியல்

*புதுக்குடியிருப்பு விசேட நிருபர்*

பணக்கொடுக்கல், வாங்கலில் ஏற்பட்ட பிணக்குத் தொடர்பாக ஒருவரைக் கடத்தி அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர்களை கடந்த புதன்கிழமை (03) நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கொழும்பைச் சேர்ந்த இந்த நால்வரும் கடந்த செவ்வாய்க்கிழமை (02) பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பணக்கொடுக்கல், வாங்கலில் ஏற்பட்ட பிணக்கின் போது, அந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக ஒருவரை கடத்தி அச்சுறுத்திய சம்பவம் தொடர்பாக இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

# வடக்கில் சீன உதவி திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வீடு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



வட மாகாணத்தில் சீனாவின் உதவித் திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (04) யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

வட மாகாண மக்களுக்காக சீன அரசாங்கத்திடமிருந்து சுமார் 1,500 மில்லியன் ரூபா கிடைக்கவுள்ளதையடுத்து, இந்த நிதியுதவியில் அரிசி, வலைகள் மற்றும் வீடுகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

அது மட்டுமல்லாது, ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து சுமார் 1,600 மில்லியன் ரூபா கிடைக்கவுள்ளதால், அதற்கான வேலைத்திட்டங்களை தயார் செய்து வருவதாகவும் ஆசிய அபிவிருத்தி வாங்கியும் உதவத் தயாராக இருப்பதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் புதுடில்லி செல்லவுள்ளதால், இந்தியாவும் எமக்கு பல மில்லியன் ரூபா உதவித் திட்டங்களை வழங்குமென்று எதிர்பார்ப்பதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

### வடக்கின் நிர்வாகம், ஏனைய விடயங்கள் உட்பட

# அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் கிழக்கையும் ஒன்றிணையுங்கள்



வடக்கின் அதிகாரப்பரவலாக்கம், நிர்வாகம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் போது, கிழக்கு மாகாணத்தையும் ஒன்றிணைத்து நடத்துவது சிறந்ததாக உள்ளது.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போது,

"எதிர்வரும் 11ஆம் 12ஆம் 13ஆம் திகதிகளில் வடக்கிலுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்துப் பேசவுள்ளார். இதன்போது, வடக்கின் அபிவிருத்தி மற்றும் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பிலும் வடக்கில் இடம்பெறுகின்ற பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு தீர்வு எடுப்பதற்கான விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்படும் கூட்டமாக இது அமையவுள்ளது.

எங்களை பொறுத்தவரையில் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதொன்றாக உள்ளது.

வடக்கு, கிழக்கு எமது தாயக பூமி. இனப் பிரச்சினை சார்ந்து, வடக்கு, கிழக்கு சார்ந்து இந்த மண்ணை காப்பதற்காகவே எத்தனையோ போராளிகளும் பொதுமக்களும் மரணித்தனர்.

எனவே, வடக்கில் மட்டும் அபிவிருத்தி மற்றும் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பிலும் வடக்கில் இடம்பெறுகின்ற பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வு எடுப்பதற்கான விடயங்கள் தொடர்பிலும் எடுக்கப்படும் முயற்சிகள் காலத்தைக் கடத்துகின்ற, ஏமாற்றுகின்ற செயற்பாட்டை கையாள்வதாக அமைந்துள்ளது.

ஜனாதிபதியிடம் கோரிக்கையொன்றை முன்வைக்கின்றோம். அதாவது வடக்கு, கிழக்கு சார்ந்த அபிவிருத்தி, அதிகாரப்பரவலாக்கம், வடக்கு, கிழக்கிலிருக்கும் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதேயாகும். இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாது விடும் பட்சத்தில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதா? இல்லையா? என்பதை நாங்கள் முடிவெடுக்கக் கூடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயம் தொடர்பில் ஆராயவுள்ளது.

எனவே வடக்கு, கிழக்கு இணைந்த அபிவிருத்தி, அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும் என்பது எமது கோரிக்கை. எனவே, கிழக்கை விடுத்து எவ்வித நல்லெண்ண முயற்சிகள்

06

### தையிட்டி புத்தர் விகாரை விவகாரம்:

# வழிபாட்டுக்கு தடையேற்படுத்த வேண்டாமென நீதிமன்றம் உத்தரவு

*யாழ். விசேட நிருபர்*



யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் நேற்று (05) முன்னெடுக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு தையிட்டி பிரதேசத்தில் இதுவரைகாலமும் விடுவிக்கப்படாமலுள்ள பொதுமக்களின் காணிக்குள் அமைக்கப்பட்டு வருகின்ற விகாரைக்கு மேலதிகமாக, அதனைச் சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாக பொதுமக்களும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து கடந்த புதன்கிழமை போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதற்கு தடை விதிக்குமாறு பொலிஸார் கோரியிருந்தனர். இதனை மறுத்த மல்லாகம் நீதிமன்றம், அமைதியான முறையில் போராட்டம் நடத்த அனுமதி வழங்கினார். இதேவேளை, தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையின் வழிபாடுகளுக்கும் உற்சவத்துக்கும் எந்தவித இடையூறும் ஏற்படுத்தக் கூடாதெனவும், மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட ஐந்து பேரின் பெயர்களை குறிப்பிட்டு நேற்று பிற்பகல் மல்லாகம் நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. ஒவ்வொருவரும் அமைதியின்மையை விளைவிக்காத வகையில் செயற்பட வேண்டும். விகாரையின் முன்பக்கத்திலோ அல்லது விகாரைக்கு செல்லும் வழியிலேயோ தடைகளை ஏற்படுத்தக்

06

# ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம்

*மாங்குளம் குறூப் நிருபர்*



ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் கடந்த புதன்கிழமை (03) நடைபெற்ற போது, ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோக ராதலிங்கம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பா.ஜெயராணி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களான நீர்ப்பாசனம், விவசாயம், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், அப்பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

# கறுப்புப் பட்டியலில் 50 வைத்தியர்கள்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை



முன்னறிவிப்பின்றி வெளிநாடு சென்ற 50 வைத்தியர்களை கறுப்புப்பட்டியலில் சேர்த்துள்ளதாக, சுகாதார அமைச்சின் பணிப்பாளர், வைத்தியர் பிரியந்த அத்தபத்து தெரிவித்தார்.


இதேவேளை, பலாங்கொடை வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர்கள் இன்மையால், சத்திர சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அங்கு சுமூகமற்ற சூழல் காணப்படுகிறது.

இந்த வைத்தியசாலையில் ஏற்கெனவே ஆறு வைத்தியர்கள் கடமையாற்றியிருந்த போதிலும், நேற்று இரண்டு வைத்தியர்கள் மாத்திரமே கடமையிலிருந்தனர். இதனால், வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த நோயாளர்கள் சிரமத்திற்குள்ளாகினர்.

மறு அறிவிப்பு வரும்வரை வைத்தியசாலையில் அவசர அறுவை சிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுமென, வைத்தியசாலையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

### சீரற்ற காலநிலை காரணமாக

# கட்டுநாயக்க வந்த விமானங்கள் மத்தளவில் தரையிறக்கம்



கொழும்பு, கட்டுநாயக்க பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கவிருந்த விமானங்கள் மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை (04) இரவு 10.25 மணியளவில் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னிலிருந்து கொழும்பு வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் UL 605 சீரற்ற காலநிலை காரணமாக மத்தள விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதேவேளை, சவூதி அரேபியாவின் தமாமிலிருந்து நேற்று (05) அதிகாலை 5.55 மணிக்கு கட்டுநாயக்கவில் தரையிறங்கவிருந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மத்தளவுக்கு திருப்பி விடப்பட்டது.

இலங்கை மற்றும் இந்தியாவில் நிலவும் மோசமான வானிலை காரணமாக பல விமானங்கள் தாமதமாகி வருவதாக, கட்டுநாயக்க விமான நிலையம் நேற்று தெரிவித்துள்ளது.

# எல்கடுவ புத்தர் சிலைக்கருகில் பிறந்து 05 நாட்களேயான சிசு

## பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் மீட்பு

எல்கடுவ, ஸ்ரீமலியதேவ விகாரையில் புத்தர் சிலைக்கு அருகில் பிறந்து 5 நாட்களேயான சிசுவொன்றை பெற்றோர் கைவிட்டுச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விகாரையில் புத்தர் சிலைக்கருகில் சிசுவொன்று இருப்பதாக வத்தேகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, இந்தச் சிசு மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சிசு சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சிசுவின் பெற்றோரை தேடி பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை, இலங்கையில் குழந்தைகளைக் கைவிடும் தம்பதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அரசாங்கம் குழந்தைகள் காப்பக பெட்டிகளை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது.

புதிதாகப் பிறந்த குழந்தைகளை வளர்க்க முடியாத அல்லது அந்த குழந்தைகளில் விருப்பமில்லாத பெற்றோர், குழந்தைகளை அரசின் பொறுப்பில் விட்டுச் செல்லும் நோக்கியிலேயே குழந்தைகள் காப்பக பெட்டிகளை அறிமுகப்படுத்த இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அண்மைய வருடங்களில் 60க்கும் மேற்பட்ட பெற்றோர், தமது குழந்தைகளை வீதியில் கைவிட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன், கடந்த ஆறு வருடங்களில் பல்வேறு காரணங்களால் குறைந்தது 80 சிறுவர்கள் அவநம்பிக்கையான


06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 206.30 | 219.03 |
| கனடியன் டொலர் | 228.52 | 242.56 |
| யூரோ | 343.37 | 362.22 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4688 |
| சிங்கப்பூர் டொலர் | 233.49 | 246.88 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.64 | 409.24 |
| சுவிஸ் பிராங்க் | 349.42 | 371.48 |
| அமெரிக்க டொலர் | 313.45 | 328.67 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 853.41 | கட்டார் ரியால் | 88.05 |
| குவைத் டினார் | 1,050.55 | சவூதி ரியால் | 85.78 |
| ஓமான் ரியால் | 835.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.61 |

தினகரன்
THINAKARAN තිනකරන්
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் சித்திரை மாதம் 23ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 15



குறள் தரும் சிந்தனை

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாகும்.
தீய ஒழுக்கம் என்றும் துன்பத்தைத் தரும்.

# எதிர்ப்பு அரசியலால் நன்மை விளையப் போவதில்லை!

இலங்கையில் பன்னெடுங் காலமாக நிலவி வருகின்ற தேசியப் பிரச்சினைகளுக்கு இன்னுமே தீர்வு காணப்படாமலிருப்பதற்கு எதிர்ப்பு அரசியலும் ஒரு காரணமாகின்றது. எமது நாட்டில் எதிர்ப்பு அரசியலானது தென்னிலங்கைக்கு மாத்திரமே உரியதன்று. வடக்கு, கிழக்கின் தமிழ்ப் பிரதேசங்களிலும் எதிர்ப்பு அரசியலானது அக்காலம் முதல் இன்றும் தொடர்ந்து கொண்டே வருகின்றது.

தென்னிலங்கை அரசியல் களத்தைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் அத்தனை கொள்கைத் திட்டங்களையும் எதிர்ப்பதென்பதே எதிர்க்கட்சியின் எழுதப்படாத சித்தாந்தம் ஆகியுள்ளது. ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ள அரசாங்கம் முற்போக்கான பயனுள்ள திட்டமொன்றை நடைமுறைப்படுத்த முற்படுகின்ற போதிலும் கூட, அத்திட்டத்தை எதிர்ப்பதென்பதே எதிரணியினரின் மாற்ற முடியாத சுபாவமாகிப் போயுள்ளது.

இவ்வாறான பின்னடைவான அரசியல் போக்கானது இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னரான காலப்பகுதியில் இருந்து இன்னுமே தொடர்ந்தபடி செல்வது துரதிர்ஷ்டவசமானதாகும்.

இலங்கையில் கடந்த சில வருடங்களாக நிலவி வருகின்ற நிலைமையானது எவருமே அறியாததொன்றல்ல. உலகப் பெருந்தொற்றான கொவிட் வைரஸ் எமது நாட்டையும் ஆட்கொண்டதன் கரணமாக இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் அனைத்துமே முடங்கிப் போயிருந்தன.

பல்லாயிரக்கணக்கான மக்களை எமது தேசம் கொவிட் தொற்றுக்குப் பலிகொடுத்தமை மாத்திரமே இங்கு சம்பவித்த பெருந்துயரமெனக் கூற முடியாது. உலக முடக்கத்தின் காரணமாக எமது நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குச் சென்றமையும் அவலத்துக்குரியதொன்றாகும்.

அரசாங்கத்தின் தேசிய வருமானம் முற்றாகவே வீழ்ச்சிக்குள்ளானது. கொவிட் பெருந்தொற்றில் இருந்து மக்களைக் காப்பாற்றவும், அன்றாட வருமானமின்றி வீடுகளில் முடங்கிப் போயுள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கவுமென அரசாங்கம் திறைசேரியிலிருந்த நிதியையே முற்றாக வாரியிறைக்க வேண்டியிருந்தது.

கொவிட் தொற்றுக்குள்ளான மக்களை மருத்துவ சிகிச்சை நிலையங்களில் வைத்துப் பாதுகாக்கவும், வெளிநாடுகளிலிருந்து கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளவும் செலவிடப்பட்ட அரசாங்க நிதியானது பெருந்தொகையாகும். அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்டித் தருகின்ற அத்தனை நிறுவனங்களுமே முடங்கிக் கிடந்த வேளையில், நாட்டின் தேசிய வருமானமே முடக்கத்துக்கு உள்ளாகியிருந்தது.

ஆனாலும் அவ்வேளையில் ஆட்சியிலிருந்த அரசாங்கமானது அத்தனை இடர்களையும் எதிர்கொண்டதென்பதே உண்மை. பொருளாதார வருமானம் வருடக்கணக்கில் பாதிக்கப்பட்டதன் விளைவாகவே ஒட்டுமொத்த நாட்டிலும் வரலாறு காணாத பாரிய நெருக்கடி தலைதூக்கியது எனலாம். தனிநபர் வருமானமும் முடங்கிப் போன பின்னர் நாட்டின் பொருளாதாரம் மென்மேலும் வீழ்ச்சிக்கு உள்ளானது.

அன்றைய அவலத்தின் அடுத்தடுத்த விளைவுகளாக உருவெடுத்த நெருக்கடிகளை உலகமே நன்கறியும். ஒருபுறம் வருமான இழப்பு, மறுபுறம் அன்றாட பாவனைப் பொருட்களின் உச்சமான விலையேற்றம்!

நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தினரும் அன்றாட சீவனோபாயத்தைக் கொண்டு நடத்துவதற்கே இயலாத நிலைமை தோன்றியதும் ஆர்ப்பாட்டங்கள் தலையெடுத்தன. இந்தப் போராட்டங்களின் பின்னணியில் எதிர்க்கட்சியினரே இருந்தனரென்பது வெளிப்படையான உண்மை.

ஆட்சியிலுள்ள அரசாங்கத்தை பதவியிறக்கச் செய்வதன் மூலம், மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று ஆட்சிபீடம் ஏற முடியுமென எதிரணியினர் கனவு கண்டனர். அன்றைய அரசாங்கத்துக்கு எதிராக மக்களின் எதிர்ப்பைத் தூண்டுவதன் ஊடாக ஆட்சியைக் கைப்பற்ற முடியுமென்ற அவர்களது நோக்கம் நிறைவேறவில்லை.

அன்றைய ஆட்சியை மாத்திரமே அவர்களால் அகற்ற முடிந்ததே தவிர, அதன் பின்னர் உருவெடுத்த அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணக் கூடிய வல்லமையை எதிரணியினர் கொண்டிருக்கவில்லை. அரசியல் நெருக்கடி மென்மேலும் தீவிரமடைந்து, நாட்டில் நிலையானதொரு அரசாங்கமே இல்லாதிருந்த வேளையில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னரான சுமார் எட்டுமாத காலப் பகுதியில் நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அனைவரும் நன்கறிவர். கியூவரிசைகள் நாட்டில் முற்றாகவே நீங்கியமை ஒருபுறமிருக்க, பொருளாதார மீட்சிக்கான முன்னேற்றங்களும் வெளிப்படத் தொடங்கியுள்ளன. நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்கக் கூடிய ஆளுமை மிகுந்த தலைவராக ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாடுகளால் தற்போது பாராட்டப்படுகின்றார்.

இலங்கைத் தேசம் இனிமேல் மீண்டெழவே முடியாததென்ற அவநம்பிக்கையொன்று கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் நிலவியமை மக்களுக்கெல்லாம் நன்கு நினைவிருக்கலாம். அவ்வாறான அவநம்பிக்கையை முற்றாகவே அகற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த கால கடனுதவியையும், வெளிநாடுகளின் ஆதவையும் இலங்கை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கான பாதை திறந்துள்ள இன்றைய நிலையில் அவநம்பிக்கைகளுக்கு இனிமேல் இடமில்லை. நாட்டில் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவதே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# கடலட்டை பண்ணைத் திட்டத்தினால் பாதிக்கப்படும் வடபகுதி மீனவர்கள்



## சீன நிறுவனங்களே அதிகளவில் முதலீடு



**கடல் பிரதேசங்கள் கடலட்டை வளர்ப்பு முதலீட்டாளர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளதால், உள்ளூர் மீனவர்கள் குறுகிய பிரதேசத்துக்குள் ஒடுக்கப்பட்டுள்ளதாக கவலை! வடக்கு கடற்றொழிலாளர்கள் அன்றாட வாழ்வாதாரத்துக்கு போராட்டம்!**



வடமாகாணத்தில் அமைக்கப்படுகின்ற கடலட்டைப் பண்ணைகளால் உள்ளூர் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றதென்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

வடமாகாண கடலட்டைப் பண்ணைகளில் சீன நிறுவனங்களே முதலீடு செய்துள்ளன என்பது வெளிப்படையான விடயம். அதுவும் சீனாவின் பாரிய நிறுவனங்கள் கடலட்டைப் பண்ணைகளில் முதலீடு செய்துள்ளதால் இவையெல்லாம் பாரிய முதலீட்டுத் திட்டங்களாகும்.

கடலட்டைப் பண்ணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு எதிராக வடமாகாண மீனவர்கள் எத்தனையோ போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர். ஆனால் அப்போராட்டங்கள் பயனைத் தரவில்லை. கடலட்டைப் பண்ணைத் திட்டம் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

கடலோரப் பிரதேசங்கள் கடலட்டைப் பண்ணைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் உள்ளூர் மீனவர்கள் அப்பகுதிகளுக்குள் மீன்பிடிக்கச் செல்ல முடியாதுள்ளனர். உள்ளூர் மீனவர்கள் ஒடுக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்கள் அன்றாடம் குறைந்தளவு மீன்களையே பிடிக்கின்றனர். அதனால் வருமானம் இழக்கப்படுகின்றது என்பது பொதுவான குற்றச்சாட்டாக உள்ளது.

“நாங்கள் கடற்றொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றோம். பொருளாதார நெருக்கடியால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். சீனர்களுக்குச் சொந்தமான கடலட்டை குஞ்சு பொரிப்பகம் முன்னெப்போதையும் விட பரபரப்பாக இயங்குகிறது. கிளிநொச்சி மாவட்டம், கௌதாரிமுனையில் சீன நாட்டவர்களின் கடலட்டைப் பண்ணை வெற்றிகரமாக இயங்குகின்றது. எதிர்காலத்தில் வடக்கு மீனவர்கள் தங்களது மீன்பிடித் தொழிலை கைவிட வேண்டிய நிலைமை வரலாம்” என்கின்றனர் வடக்கு மீனவர்கள்.

சீன முதலீட்டாளர்களின் கடலட்டைப் பண்ணைகளுக்கு சட்டபூர்வமான அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும் அறிந்து கொள்ள முடியாதிருக்கின்றது என்கின்றனர் அவர்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பல பகுதிகள் கடலட்டைத் திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. கடலட்டைக் குஞ்சுகளை கௌதாரிமுனை – கல்முனை பகுதியில் உள்ள பண்ணையில் வளர்க்கும் செயற்பாடு ஏற்கனவே இடம்பெற்று வருகின்றது.

முறையான அனுமதியின்றியே இலங்கைக் கடலில் சீன பிரஜைகள் கடலட்டை பண்ணையை நடத்தி வருவதாக வடக்கு மீனவர்கள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனரென்பது குறிப்பிடத்தக்கது.

கடலட்டை பண்ணைக்காக வடக்கின் பாரம்பரிய தொழில்களை இல்லாமல் செய்து வறிய மீனவர்களை துன்புறுத்தும் செயற்பாடு இடம்பெற்று வருவதாக வடக்கு மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

கிளிநொச்சி, பூநகரி கிராஞ்சி இலவன்குடா பகுதியில் கடலட்டை பண்ணை விவகாரம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடலட்டை பண்ணைகளால் தமது தொழில் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்திற்கே பெரும் சிரமப்பட்டு வருவதாகவும், தமக்கான நீதியை வழங்க வேண்டும் எனவும் உள்ளூர் மீனவர்கள் கோரி வருகின்றனர்.

வாழ்வாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தம்மை, எவரும் கண்டு கொள்வதில்லை என ஆதங்கம் வெளியிட்டுள்ள மக்கள், தமக்கான நீதியை பெற்றுத் தருவதற்கு அனைத்துத் தரப்பினரும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் சுமார் 5000 ஏக்கரில் கடல் அட்டைப் பண்ணைகளை விரிவுபடுத்த ஏற்கனவே திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாகவும், சுமார் 1150 ஏக்கரில் கடலட்டைப் பண்ணைகள் செயற்படுவதாகவும் உள்ளூர் மீன்பிடித் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ் மாவட்டத்தில் 200 இற்கு மேற்பட்ட கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் நூற்றுக்கணக்கான பண்ணைகள் அமைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன. மன்னார் மாவட்டத்தில் பல பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் பல பண்ணைகள் அங்கு அமைக்கப்பட உள்ளன.

கடலட்டை பண்ணைகளால் சூழலுக்கு ஆபத்து ஏற்படுமென்று சூழலியலாளர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடலட்டைப் பண்ணைகள் கரையோரத்தை அண்டிய ஆழம் குறைந்த கடற்பகுதியில் அமைக்கப்படுகின்றன. இதற்காக பல ஏக்கர் பரப்பளவுள்ள கடல் பகுதி தனியாருக்கு வழங்கப்படுவதனால், இந்தப் பகுதியில் இதுவரை காலமும் மீன்பிடித்துக் கொண்டிருந்த, சிறு தொழிலில் ஈடுபடும் நூற்றுக்கணக்கான மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அரியாலை, அல்லைப்பிட்டி மற்றும் புங்குடுதீவு பிரதேசங்களிலும் கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் கிராஞ்சி, வலைப்பாடு, வேரவில், பள்ளிக்குடா, நாச்சிக்குடா, இரணதீவு ஆகிய பகுதிகளிலும் இந்தப் பண்ணைகள் உள்ளன.

இந்தப் பண்ணைகளை அமைப்பதற்கு பல இலட்ச ரூபா முதலீடு செய்ய வேண்டி இருப்பதால் சாதாரண உள்ளூர் தொழிலாளர்களால் இதற்கு செலவிட முடியாது. பல நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் வியாபாரிகளாலேயே இந்தப் பண்ணைகளுக்கென முதலீடு செய்யப்பட்டுள்ளது.

அப்பிரதேசங்களில் இறால் மற்றும் நண்டு பிடித்தலுக்காக கூடு அமைப்போர், வீச்சுத் தொழில் செய்வோர் தங்கள் தொழில்களைச் செய்வதற்கான இடங்கள் இந்தப் பண்ணைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால், அந்தத் தொழிலை நம்பி வாழும் ஏராளமான மீனவக் குடும்பங்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளன.

வடமாகாணத்தின் கடல்வளத்தையே பாதிக்கின்ற கடலட்டைப் பண்ணைகளால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றதென்பதே அங்குள்ள கடற்றொழிலாளர்களின் குரலாக உள்ளது.

**எஸ். சாரங்கன்...**

# சென்னையில் நூல் வெளியீடும் நித்தியின் பிறந்ததின விழாவும்

மலையகத்தின் ஆளுமையான மு. நித்தியானந்தன் தனது 75 ஆவது பிறந்த தின பவள விழாவில் நான்கு புத்தகங்களை லண்டனில் அண்மையில் வெளியிட்டார்.

சென்னையில் 'மலையக இலக்கியம் சிறுமை கண்டு பொங்குதல்' நூல் வெளியீடு மற்றும் பிறந்தநாள் விழா, ஆகியன நடைபெற்றன. 'வாருங்கள் படிப்போம்', 'சென்னை புத்தகக் குழு' இரண்டும் இணைந்து எம். டி. ஜி அரங்கில் விழா கொண்டாடப்பட்டது.







நிகழ்ச்சி பேராசிரியர், சென்னை புத்தகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பிரேம்குமார் அவர்களின் வரவேற்புரையோடு ஆரம்பமானது.

எழுத்தாளரும், பதிப்பாளருமான கோ.ஒளிவண்ணன் அனைவரையும் அறிமுகம் செய்து, “இந்த நிகழ்ச்சி நித்தியானந்தன் ஐயாவிற்கானது அல்ல இது எங்களுக்கானது, அவர்களால் நாங்கள் பெருமை அடைகிறோம்” என்று மு. நித்தியானந்தனிற்கு புகழாரம் சூட்டினார்.

மு. நித்தியானந்தனும், பத்மநாபன் ஐயரும் லண்டனில், வெளியீட்டாளர்கள் சென்னையில், மலையக கலைஇலக்கிய செயற்பாட்டாளர் எச்.எச். விக்கிரமசிங்க கொழும்பில், இவர்கள் ஒன்றிணைந்து சென்னையில் பதிப்பிட்டு லண்டனுக்கு அனுப்புவதில் விக்கிரமசிங்கவும், பத்மநாபன் ஐயர் இருவரும் எடுத்த முயற்சியை நான் வியந்துபோற்றுகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்திரன் அவர்கள் நூலை வெளியிட, எம்.ஜி.ஆர் அவர்களின் பேரன் சென்னை ரோட்டரி தன்னார்வ தொண்டு நிறுவனத்தின், டொக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சென்னை, முனைவர் குமார் ராஜேந்திரன் அவர்கள் நூலைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்.

மலையக இலக்கியங்களையும் இலக்கியவாதிகளையும் எப்பொழுதும் உலகெங்கும் உள்ள தமிழ் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று அயராது இலக்கிய பணி செய்து கொண்டிருக்கும், இலங்கை இந்தியா இலக்கிய பாலமாக, எப்பொழுதும் துடிப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் எச்.எச் விக்ரமசிங்க அவர்கள் இந்நிகழ்விற்காக கொழும்பிலிருந்து வருகை தந்து தனது நண்பனான மு நித்தியானந்தன் ஐயா அவர்கள் பற்றிய, மலையக இலக்கியங்கள் குறித்த, மிகச் சிறப்பான உரையைச் சுருக்கமாக ஆற்றி சென்றார் என்று ராஜேந்திரன் தெரிவித்தார்.

சென்னை புத்தகக் குழுவின், ஒருங்கிணைப்பாளர் ஜாய்சி அவர்கள் அனைவருக்கும் தனித்தனியாக நன்றி கூறி முடித்த பின்பு கேக் வெட்டி பிறந்தநாள் விழா கொண்டாடினர். ஈழத்து எழுத்தாளர் சோபா சக்தி, இளம்பிறை ரகுமான், சே. கணேசலிங்கம் அவர்களின் புதல்வி மான்விழி, பத்திரிகையாளர் முரளி கார்மேகம், சட்டத்தரணி செந்தில் ஆகியோரும் பங்கேற்றனர்.

தெளிவத்தை ஜோசப் கதைகள் என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுப்பை மு.நித்தியானந்தன், எச்.எச் விக்கிரமசிங்க இருவரும் இணைந்து வெளியிட இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அர்ஷா சென்னை...**

# பாலமுனை பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புக்கான வேலைத் திட்டம்

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தேசிய டெங்கு ஒழிப்புவாரத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம், நடமாடும் விழிப்புணர்வு நிகழ்வு என்பன அண்மையில் பாலமுனை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாலமுனை பிரதேசத்துக்கானபொதுச்சுகாதார பரிசோதகர் எம்.பி.மிஹியார், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.ஐ.ஹைதர் உட்பட அட்டாளைச்சேனை பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர்கள்,பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக் கழக மற்றும் அட்டாளைச்சேனை Iconic youth அமைப்பின் உறுப்பினர்கள்,சுகாதார உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





இதன் போது அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் பாலமுனை பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று பரிசோதனை நடத்தியதுடன் டெங்கு பரவக்கூடிய வகையில் காணப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள், இளநீர் கோம்பைகள், தகரடப்பாக்கள் போன்ற கழிவுப் பொருட்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டன.

மேலும் டெங்கு நுளம்பு பெருக்கத்துக்கு இடமளிக்கும் வகையில் வீட்டுச் சூழல்களை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் மற்றும் வெற்றுக்காணி உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டதுடன் அதனை மீறி செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி இதன் போது தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மற்றும் நடமாடும் விழிப்புணர்வு நிகழ்வு வேலைத்திட்டமானது பாலமுனை ஆறு கிராம சேவகர் பிரிவுகளிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஐ.ஏ.ஸிறாஜ்...**
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் துறவறம் பூண்டு நேற்றுடன் 99 ஆண்டுகள் பூர்த்தி

**நேற்று( 5.5.2023) வெள்ளிக்கிழமை சித்ரா பௌர்ணமி தினம். இத்தகைய தினத்தில்தான் உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் துறவறம் பூண்டார். தனது 30 ஆவது வயதில் அதாவது 1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியில் துறவறம் பூண்ட சுவாமிகளின் துறவறத்திற்கு இன்று 99 வயதாகிறது.**

சுவாமி விபுலாநந்தர் (மார்ச் 27, 1892 – ஜூலை 19, 1947) பிறந்து சுமார் 131 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. சுவாமி விபுலாநந்தரின் கல்விப் பணியும் அவர் ஆற்றிய தமிழ்ப் பணியும், அவர் உருவாக்கிய தாபனங்களும் காலத்தால் மறையாது. இலங்கையில் தமிழ்த் திறனாய்வுத்துறை வளர்ச்சி பெறுவதற்கு முதற்படியை அமைத்துக் கொடுத்தவர் சுவாமி விபுலாநந்தரே என்றால் அது மிகையாகாது. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இருக்கும்வரை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் திருநாமமும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாளரும், திருப்புகழுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை சுவாமிகள் ஏற்றுக் கொண்டார்.

இயல்பாகவே இறைநாட்டம் கொண்டிருந்த மயில்வாகனன் 'ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்', சமயத்திற்காக ஆற்றி வரும் பணிகளை அறிந்து, தம்மையும் அந்த அமைப்புடன் ஈடுபடுத்திக் கொள்ளலாமென எண்ணியிருந்த வேளையில், யாழ்ப்பாணத்துக்கு [1917] சுவாமி சர்வானந்தர் வருகை புரிந்தார். சர்வானந்தரின் தொடர்பு மயில்வாகனனின் உள்ளத்துள் 'திறவுத் தூய்மை' எனும் திருவிளக்கை ஏற்றி வைத்தது.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக 'யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்' என்ற கழகத்தை அமைத்து தமிழை வளர்க்கலானார். இந்தச் சங்கத்தின் மூலம் பிரவேசப் பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மயில்வாகனனாரின் இந்த முயற்சி எத்தனையோ பண்டிதமணிகளை இலங்கைக்கு அளித்துள்ளது.


மனதை ஈர்ந்து வந்த துறவுணர்வு, நாளும் பொழுதும் பெருகி, ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனில் சங்கமிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். ஆசிரியப் பதவியைத் துறந்து 1922ஆம் ஆண்டில் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து சென்னைக்குப் புறப்பட்டார், மயில்வாகனன்.

சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சிவானந்தரினால் பிரபோத சைத்தன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும், சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன. இரண்டு வருடங்கள் அங்கு பயின்ற அவர், இராமகிருஷ்ண மிஷன் நடத்திய 'இராமகிருஷ்ண விஜயம்' என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும், 'Vedanta Kesari' என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகவிருந்து பல அரிய கட்டுரைகளை எழுதினார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டித பரீட்சையின் பரீட்ஷார்த்தகராக நியமிக்கப்பட்டார். தமிழ்ச்சங்க வெளியீடான 'செந்தமிழ்' எனும் சஞ்சிகையில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பல திறனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டிருக்கிறார். இக்கட்டுரைகள், 'மதங்க சூளாமணி' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தில் சுவாமி சிவானந்தரால் 'சுவாமி விபுலாநந்தர்' என்ற துறவறப் பெயர் வழங்கப்பட்டது. அதன் பின்னர், அவர் இலங்கை திரும்பி, இராமகிருஷ்ண மிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

செட்டி நாட்டரசர் வேண்டுகோளின்படி, சுவாமி விபுலாநந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931 ஆம் ஆண்டு தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று, பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்து போற்றக்கூடிய தம் தமிழ்த் தொண்டைப் பதிவு செய்தார். அக்காலப் பகுதியில்தான் அவருடைய இசை சம்பந்தமான ஆராய்ச்சி ஆரம்பமாகியது.



## சித்ரா பௌர்ணமி தினத்தன்று இறைபணியில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டவர் முத்தமிழ் வித்தகர்



புராதன தமிழர் இசை பற்றி அவர் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். 1934ஆம் ஆண்டில், அண்ணாமலை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பதவியில் இருந்து விலகி இலங்கை திரும்பிய அடிகளார், இங்கு இராமகிருஷ்ண மிஷன் மேற்கொண்டு வந்த கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

இராமகிருஷ்ண மிஷன் இமயமலை பகுதியில் உள்ள Almorah என்ற இடத்தில் மாயாவதி ஆசிரமத்தில் இருந்து வெளியிடும் 'பிரபுத்த பாரத (Prabuddha Bharatha)' என்ற சஞ்சிகையின் ஆசிரியராக 1934 ஆம் ஆண்டில் விபுலாநந்த அடிகள் நியமிக்கப்பட்டார். அங்குதான், இசைத் தமிழ் பற்றிய முழுமையான ஆய்வு செய்யப்பெற்று, அரிய நூலாகிய 'யாழ் நூல்' உருவாக்கம் பெற்றது.

1945ஆம் ஆண்டில், இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளுக்கிணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத்துறை எவ்வழியில் செல்ல வேண்டும் என்ற திட்டங்களை சுவாமி விபுலாநந்தரே வகுத்தார் என்பது நினைவில் இருக்கத்தக்கது.

அவரைத் தொடர்ந்தே பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சதாசிவம் போன்ற அறிஞர்கள் தமிழ்த் துறையை விருத்தி செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமி அவர்களின் தமிழ்த் தொண்டால் தலைசிறந்து விளங்குவது அவருடைய யாழ்நூல் ஆராய்ச்சியாகும். சுவாமி அவர்கள் பதினைந்து ஆண்டு காலம் ஆராய்ந்து கண்டுணர்ந்த யாழ்நூலினைக் கரந்தை தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் திருக்கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில் செந்தமிழ் இசைபரப்பிய ஞானசம்பந்தனின் சந்நிதானத்தில் இசை விற்பன்னர்கள் வியக்க, கற்றோரும், மற்றோரும் பாராட்ட தேவாரப்பண்களை தாமே அமைத்து 1947 ஆம் ஆண்டு ஆனித் திங்களில் அரங்கேற்றினார்.

யாழ்நூல் அரங்கேற்றத்துக்கு பின்னர் சுவாமிகள் பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பினார். கொழும்பில் மருத்துவ விடுதி ஒன்றில் தங்கி சிகிச்சை பெறலானார். 1947 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை இரவு சுவாமி விபுலாநந்தர் அமரத்துவம் அடைந்தார். சுவாமி அவர்களின் பூதவுடல், சுவாமி அவர்கள் கண்ணும் கருத்துமாக உருவாக்கிய மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் முன்னாலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

சுவாமி அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை மேல் சமாதி ஒன்று எழுப்பப்பட்டது. அதில் சுவாமி அவர்கள் யாத்த

"வெள்ளைநிற மல்லிகையோ?
வேறெந்த மாமலரோ?
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல!
வேறெந்த மலருமல்ல!
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது!"

என்ற உயிர்த்துடிப்புமிக்க கவிதை வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.



**வி.ரி.சகாதேவராஜா...**
விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர், காரைதீவு

# ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஐ.நா அபிவிருத்தித் திட்டம் வழங்கிய உதவி

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இலங்கையிலுள்ள சிறு விவசாயக் குடும்பங்களிலுள்ள பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சுமார் 1,175 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இலங்கையின் விவசாயம் மற்றும் எரிசக்தியை அடிப்படையாகக் கொண்ட சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இத்துறை சார்ந்த விவசாயப் பெண்களுக்கு உதவுவதற்காக சுமார் 3.8 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையை ஜப்பான் அரசு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக வழங்கியுள்ளது.


இந்நிகழ்ச்சித் திட்டம் அலரி மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன முன்னிலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ளும்முகமாக இரு புதிய வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

தற்போதைய சமூக பொருளாதார நெருக்கடியானது இலங்கையின் விவசாயத் துறையில் பாரியளவிலான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இந்நிலையானது அதிகரித்து வரும் எரிசக்தி மூலப்பொருட்களுக்கான செலவுகள் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக மேலும் தீவிரமடைந்து சென்றுள்ளது. இந்த நிலைமைகளை எதிர்கொள்வதற்காக ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினூடாக இந்த உதவி கிடைக்கப் பெற்றுள்ளது.

இலங்கையிலுள்ள உலர்வலய மாவட்டங்களில் குறிப்பாக வடக்கு, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி விவசாய தொழில்நுட்ப முறைகளை முன்னேற்றும் நோக்கில் அவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்படும். முதலாவதாக பெண்கள் தலைமை தாங்கும் சிறிய மற்றும் நடுத்தர வியாபார முயற்சிகளினூடாக அவர்களின் வாழ்வாதாரத்தை பன்முகப்படுத்தி தொழில் முயற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்துவதும் கிராமப்புற விவசாய பொருளாதார மறுமலர்ச்சி மூலம் உணவுப் பாதுகாப்பினை வலுவடையச் செய்தலும் அதனூடாக புதிய சந்தை வாயப்புககளை உருவாக்கிக் கொடுப்பதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

மேலும் பசுமை விவசாய தொழிநுட்பத்தினால் உற்பத்தி மற்றும் செயல்திறன்களை அதிகரித்தலும் மற்றொரு நோக்கம் ஆகும்.

இலங்கையின் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 132000 பயனாளிகளை உள்ளடக்கிய இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 58000 பெண்கள் மற்றும் இளம் சமுதாயத்தினர் நேரடியாக பயன்பெறுவர். இந்தத் திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் முகமாக ஜப்பானிய அரசாங்கத்தின் உதவிகளை அங்கீகரிக்கும் வகையிலும் நிகழ்ச்சித் திட்ட ஆரம்ப நிகழ்வானது பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இலங்கைக்கான ஜப்பான் நாட்டுத் தூதுவர் மிசுபகாஷி கிடியாக்கி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி திருமதி அசுஸ்ஸா குபபாட்டா, ஜப்பானிய சர்வமத ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதேச பிரதிநிதி படட்சுயா யோட்டா, விவசாயம், வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, சிரேஷ்ட அரச உயரதிகாரிகள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அதிகாரி பாதில் பாக்கீர் மார்க்கார் மற்றும் அபிவிருத்திப் பங்காளிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.







இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய பிரதமர் "சமூக பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக ஜப்பான் அரசாங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் வழங்கப்பட்ட தொடர்ச்சியான உதவிகளையும் ஆதரவினையும் இலங்கை அரசாங்கம் மிகவும் பாராட்டுகின்றது. மேலும் நாட்டின் பொருளாதார கட்டுக்கோப்புக்கு முக்கியமான இரு துறைகள் உணவு மற்றும் எரிசக்தியாகும். பாதுகாப்பான இலங்கையை உருவாக்க இவ்வாறான உதவித்திட்டங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றப்படியாகும். ஜப்பாண் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அதிகாரிகளுக்கு இலங்கை சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

**அஷ்ரப் ஏ சமத்...**


# பாட்டாளி வர்க்க மக்களின் நலனுக்கான மாபெரும் சிந்தனையாளன் கார்ல் மார்க்ஸ்

இன்றைய ஜெர்மனியில் மே 5, 1818 இல் பிறந்த கார்ல் மார்க்ஸ் (Karl Marx), அவரது காலத்தில் புரட்சியாளர், சமூகவியலாளர், வரலாற்றாசிரியர், பொருளாதார நிபுணர் என பல பரிமாணங்களைக் கொண்டிருந்தார்.

எவ்வாறு கூறினாலும், மார்க்சியம் 19 ஆம் நூற்றாண்டின் ஒரு சிறந்த கண்டுபிடிப்புத்தான். தத்துவம், அரசியல், பொருளாதாரம், வரலாற்று அறிவியல் மற்றும் சோசலிச சிந்தனையின் வளர்ச்சியில் மார்க்சியம் ஒரு சிறந்த கண்டுபிடிப்பு. வாழும் படைப்பாற்றல் தொடர்ச்சியானது. மார்க்சியம் ஒரு வளர்ந்து வரும் சமுதாயத்திற்கான தத்துவம். அதன் வலிமையைப் பெறுவது ஒரு சமூக நடைமுறையான வாழ்க்கையிலிருந்துதான்.

### மார்க்ஸ் தொடங்கிய போராட்டங்கள்:

உழைக்கும் தொழிற்சங்க உரிமை, தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம், பணிநேரம், ஓய்வூதியம், மக்களுக்கான நலத்திட்டங்கள், அரசாங்கமே நடத்தும் பொதுத்துறைகள், கல்வி மற்றும் சுகாதாரம் மக்களுக்கு இலவசமாக கிடைக்க வேண்டியதன் முக்கியத்துவம், அறிவியல் பார்வையின் அவசியம் அனைத்தும் மார்க்ஸ் தொடங்கி வைத்த போராட்டத்தின் அறுவடைகள் தான்.



அதனாலேயே மார்க்சியம் என்பது மனித சிந்தனையின் அனைத்து புதிய சாதனைகளையும் விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்யும் ஒரு புரட்சிகர இயக்கமாகியது. இயற்கை, சமூகம், மனித சிந்தனையின் வளர்ச்சி, இயக்கவியல், வரலாற்றுப் பொருளைச் சிறப்பாக நிர்ணயிக்கும் பொதுவாதத்தின் மூலம் உலகை அறிந்து கொள்வதும் மார்க்சியம் மூலமே.

அவரது நண்பர் பிரடெரிக் ஏங்கெல்சுடன் இணைந்து 1848 இல் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை எனும் உலகப் புகழ் பெற்ற நூலை அவர் வெளியிட்டார். அதன் காரணமாக கார்ல் மார்க்ஸ் சரித்திர நாயகனாகி விட்டார்.

கார்ல் மார்க்ஸின் எக்காலமும் அழியாத சிந்தனைகள் இன்றைய உழைக்கும் மக்களின் மூலதனமாகும். கார்ல் மார்க்ஸின் வாழ்க்கையானது பாட்டாளி வர்க்கத்தின் துயரங்களுடன் பின்னிப் பிணைந்தது. சட்டத்தரணி குடும்பத்தில் பிறந்த கார்ல் மார்க்சும் வறுமையில் வாழ்ந்தவர்.

புரட்சியை நோக்கிய காலக்கட்டத்தில்தான் பிரபல 'மூலதனம்' என்ற நூலை மூன்று தொகுதிகளாக எழுதினார். நண்பர் ஏங்கெல்ஸுடன் இணைந்து தொகுத்த கார்ல் மார்க்ஸின் நூல்கள், மனிதகுலத்தை எல்லா விதமான ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல்களிலிருந்தும் விடுவிக்கும் என்பதை நிரூபிக்க வழிகாட்டியது.

கார்ல் மார்க்ஸின் 'மூலதனம்' முதல் தொகுதி 1867 இல் வெளியிடப்பட்டது. இரண்டாம் தொகுதி அவரது மரணத்திற்குப் பின்னர் 1885 இல் வெளியிடப்பட்டது. மற்றைய தொகுதிகள் 1894 இல் வெளிவந்தன.

கார்ல் மார்க்ஸ் வாழ்ந்த காலத்திலிருந்து இன்றைய ஆண்டுகளைத் திரும்பிப் பார்த்தால், உழைக்கும் மக்களிடையே அவரது போதனையின் செல்வாக்கு எவ்வாறு வளர்ந்தது என்பதை நாம் தெளிவாகக் காணலாம்.

கார்ல் மார்க்ஸ் இறந்த பிறகும், அவருடைய கருத்துக்கள் பாட்டாளி வர்க்கத்தின் ஒளிரும் ஆயுதங்களாகவே இருக்கின்றன. கார்ல் மார்க்சின் கருத்துகள் காலத்தால் அழியாதவை.

கார்ல் மார்க்ஸ் மார்ச் 14, 1883 அன்று லண்டனில் காலமானார். இதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு மார்க்சின் மனைவி ஜென்னி மார்க்ஸ் மரணமடைந்தார்.

மார்க்ஸ் இறந்த போது அவரது நண்பர் ஏங்கெல்ஸ், "மனித குலத்தில் ஒரு தலை குறைந்து விட்டது, அது நம் காலத்திலேயே மாபெரும் தலை" என்று எழுதினார். உண்மையிலேயே அது பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைதான்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

யாழ்ப்பாணத்தில்

# மீற்றருள்ள ஆட்டோக்களே சேவையில் ஈடுபட அனுமதி

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் கட்டண மீற்றர் பொருத்தாத முச்சக்கரவண்டிகள் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாதென, யாழ். மாவட்டச் செயலர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்,

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த புதன்கிழமை (03) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

வாடகைக்கு அமர்த்திச் செல்லப்படும் முச்சக்கர வண்டிகளில் மீற்றர் பொருத்தாமையால், அதிகளவில் கட்டணம் அறவிடப்படுவது உட்பட பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இம்முறைப்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்காக முச்சக்கர வண்டி வாடகைச் சங்கத்தினர், மோட்டார் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், யாழ். மாநகர சபை பிரதிநிதி, வடமாகாண போக்குவரத்து அதிகாரசபைத் தலைவர், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னர், வாடகைக்கு சேவையில் ஈடுபடும் சகல முச்சக்கர வண்டிகளிலும் மீற்றர் பொருத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் மீற்றர் பொருத்தப்படாத முச்சக்கர வண்டிகள் வாடகைக்கு சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி மறுப்பதுடன், தரிப்பிடங்களில் முச்சக்கர வண்டிகளை தரித்து வைப்பதற்கான பதிவை இரத்துச் செய்வது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

# "எருக்கலம்பிட்டி இப்றாஹிம் சேரின் மறைவு கவலை தருகிறது"

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்!

மன்னார், எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் அல்ஹாஜ் முஹம்மது இப்றாஹிம் சேர் இறையடி சேர்ந்த செய்தி கவலையளிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்,

"எந்தச் சந்தர்ப்பத்திலும் எல்லோருடனும் இன்முகத்துடன் பழகும் வாஞ்சையுள்ள குணமுடையவர். புன்முறுவலும் ஒரு "சதகா" வே என்ற இஸ்லாத்தின் உயர் கோட்பாட்டுக்கு உயிரூட்டுவதாகவே அவரது செயற்பாடுகள் இருந்தன. எனது அமைச்சில் என்னுடைய இணைப்புச் செயலாளராக பணியாற்றிய காலத்தில், மக்களுடன் பழகுவதையும் அவர்களை அனுசரிப்பதிலும் மிக நேர்த்தியாக நடந்துகொண்டவர்.

அதேபோன்று, மர்ஹூம் நூர்தீன் மசூர் அமைச்சராக இருந்தபொழுது, அவரது செயலாளராகவும் இருந்து நல்ல பணிகளை ஆற்றியவர்.

மேலும், அவர் ஒரு ஆசானாகவிருந்து கல்விச் சமூகத்திற்காக பெரும் பணியாற்றியவர். பல கல்விமான்கள், அரசியல்வாதிகள், ஆலிம்கள் உருவாகுவதற்கு வழி சமைத்தவர்.

மானிடத்தை நேசிப்பதில் மர்ஹூம் இப்றாஹிம் சேரிடமிருந்த மாண்பியமே அவரை மறுமை வாழ்க்கையில் ஈடேற்றிவிடும். இந்த நம்பிக்கை என்னிடமுள்ளது. இதற்காகவே நான் பிரார்த்திக்கிறேன்.

அவரவர் தவணை வரையிலும் தான் இவ்வுலகில் ஆத்மாக்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இன்றுடன் முடிந்துபோன இப்றாஹிம் சேரின் ஆத்மாவை எல்லாம் வல்ல இறைவன் பொருந்திக்கொள்ளட்டும்.

அன்னாரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு மன ஆறுதலை அளிக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

மேலும், எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் பாவங்களை மன்னித்து, ஜன்னத்துல் பிர்தௌஸுல் அஃலா எனும் உயர்மிகு சுவனத்தை அன்னாருக்கு வழங்குவானாக..! ஆமீன்..!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## வழிபாட்டுக்காக தடையேற்... (03ஆம் பக்கத் தொடர்)

கூடாதெனவும் விகாரையில் வழிபாட்டுக்கு வரும் பக்தர்களுக்கும் அங்கு நடைபெறும் உற்சவங்களுக்கும் இடையூறு ஏற்படுத்தக் கூடாதெனவும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அங்கு தொடர்ந்தும் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு செல்லும் வீதியை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பயன்படுத்தக் கூடாதென பொலிஸார் நேற்று முன்தினம் இரவு அறிவித்ததாகவும் இதன்போது சற்று பதற்ற நிலை ஏற்பட்டதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் எமது செய்திச் சேவைக்கு தெரிவித்தார்.

## அதிகாரப்பரவலாக்கம்... (03ஆம் பக்கத் தொடர்)

எடுத்தாலும், அந்த முயற்சிகள் தோல்வியடையும்.

எங்களைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கு பிரதான மூச்சாக உள்ளது. எனவே, கிழக்கை விடுத்து வடக்கை மட்டும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதை நாங்கள் ஏற்க மாட்டோம்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளேன். வடக்கு, கிழக்கு இணைந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட வேண்டும். அதன் அடிப்படையில், உரிய காலத்துக்கு முன் தனது கருத்தை மாற்ற வேண்டும்.

எதிர்வரும் 11ஆம் 12ஆம் 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்" என்றார்.

## A/L விடைத்தாள் திருத்தும்...

மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு பல்கலைக்கழக விவுரையாளர் சங்கத்தின் நிறைவேற்று சபை, விடைத்தாள் மதிப்பீடு செய்யத் தீர்மானித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதியுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நடத்த எதிர்பார்த்துள்ள கலந்துரையாடலை அடுத்த வாரம் ஒழுங்கு செய்யவுள்ளதாக, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்ரிய அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் இதனை அறிவித்திருந்தது.

உழைக்கும் போதே வரி செலுத்தும் திட்டத்தை தளர்த்துமாறும் அல்லது அதற்கு ஈடான நிவாரணம் வழங்குமாறும் கோரி பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக உயர்தர விடைத்தாள் மதிப்பீடு செய்யும் செயற்பாடுகள் சுமார் இரண்டரை மாதங்கள் தாமதமாகின. இதனால், மாணவர்கள் மற்றும் பெற்றோர் பெரும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 'பௌத்தாலோக மத... (03ஆம் பக்கத் தொடர்)

வண. ஒலபொடுவ தம்மிக தேரர் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தர்ம கலந்துரையாடலில் இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர், தென்னிலங்கையின் உப பிரதம சங்கநாயக, கோட்டை சம்புத்தாலோக விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் வண. இத்ததெமலியே நாயக்க தேரர், வித்யாஜோதி விருது பெற்ற பேராசிரியர் நிமல் டி சில்வா, மனிதவளம் மற்றும் தொழில் துறை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுல ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, 'புத்த ரஷ்மி' தேசிய வெசாக் கொண்டாட்டத்தையிட்டு காலி முகத்திடல், ஷங்ரிலா பசுமை மைதானம் மற்றும் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் வெசாக் தோரணங்கள், வெசாக் கூடுகள், பக்திப் பாடல்கள், அன்னதானம் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், சிங்கப்பூரின் மகா கருணா பௌத்த சங்கமும் சிங்கப்பூரின் விலிங் ஹார்ட்ஸ் (Wiling Hearts) அறக்கட்டளையும் இணைந்து ஏற்பாடு செய்த நாற்பது பிக்கு மாணவர்கள் மற்றும் 1,200 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, ஷங்ரிலா பசுமை மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேடையில் நடைபெற்றது.

வெசாக் அன்னதான நிகழ்வு இரவு 7.00 மணிக்கு ஷங்கிரிலா பசுமை மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன், அது மே 5 மற்றும் 6ஆம் திகதிகளிலும் தொடர்ந்து நடைபெறும்.

சிங்கப்பூர் மகா கருணா பௌத்த சங்கத்தின் தலைவர் கலாநிதி வண. கரதெடியன குணரதன தேரர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் இணைந்து மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் தலைவர் சந்திர நிமல் வாகிஷ்ட ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

குருணாகல், கேகாலை, கம்பஹா, கொழும்பு, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாடசாலை மாணவர்களுக்கு இந்தப் பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், அதன் பின்னர் அவர்கள் கோட்டை ஜனாதிபதி மாளிகையை பார்வையிடும் வாய்ப்பும் வழங்கப்பட்டது.

இதேவேளை, ஷங்ரிலா பசுமை மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேடையில் இலங்கை கடற்படை, சிவில் பாதுகாப்புப் படை, இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இராணுவ பக்தி பாடல் குழுக்களின் பக்திப் பாடல்கள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

## எல்கடுவ புத்தர்... (03ஆம் பக்கத் தொடர்)

பெற்றோரால் கொல்லப்பட்டுள்ளதாகவும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்தே, குழந்தை காப்பக பெட்டிகளை அறிமுகப்படுத்தும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் என்.ஐ.லியனகே தெரிவித்தார்.

இந்நிலையில், கைக்குழந்தைகளை குழந்தைகள் காப்பக பெட்டிகளில் விட்டுச் செல்ல விரும்பும் பெற்றோருக்கு எதிராக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படாது என்றும், ஆணையாளர் கூறியுள்ளார்.

## ஐந்து மாவட்டங்களுக்கு ...

கொட்டபொல மற்றும் பஸ்கொட ஆகிய இடங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆகையினால், மண்சரிவு அபாயமுள்ள இடங்களில் வசிக்கும் மக்கள் நிலத்தில் வெடிப்பு, இருக்கும் வெடிப்பு விரிவடைதல், நிலம் சரிவு, மரங்கள், மின்கம்பங்கள், வேலிகள் மற்றும் தொலைபேசிக் கம்பங்கள் சாய்ந்திருப்பது ஆகிய அறிகுறிகளைக் கவனிக்குமாறு, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன், சரிவுகளில் கட்டப்பட்ட கட்டடங்களின் தரைகள், சுவர்களில் வெடிப்பு, நீரூற்றுகள் திடீரென தோன்றுதல் போன்ற அறிகுறிகளையும் கவனத்தில் கொள்ளுமாறும், அந்நிறுவகம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், மண்சரிவு அபாயமுள்ள இடங்களில் வசிக்கும் மக்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமென்பதுடன், கனமழை தொடரும் பட்சத்தில் பாதுகாப்பான இடங்களுக்கு விரைந்து செல்லத் தயாராக இருக்க வேண்டுமெனவும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் எச்சரித்துள்ளது.

## ஷாப்டர் குடும்பத்தவரின்...

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முன்மொழியப்பட்ட கோரிக்கைக்கமைய, கொழும்பு பிரதான நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். அத்துடன், விசாரணையை மே 8ஆம் திகதிக்கு அவர் ஒத்திவைத்துள்ளார்.

இதேவேளை, தினேஷ் ஷாப்டரின் உயிரிழப்பு தொடர்பில் உண்மையை கண்டறியும் வகையில் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட குழுவில் பேராசிரியர் அசேல மெண்டிஸ், பேராசிரியர் டி.சி. ஆர்.பெரேரா, பேராசிரியர் டி.என். பி.பெர்னாண்டோ, கலாநிதி சிவசுப்பிரமணியம் மற்றும் கலாநிதி ரொஹான் ருவன்புர ஆகியோர் செயற்படுகின்றனர்.

## ஜப்பானில் 6.3...

வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும், இந்த நிலநடுக்கத்தை அடுத்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

## இலங்கை மத்திய வங்கியின் ...

எனினும், இந்த உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துகளில் சீனாவின் மக்கள் வங்கியின் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இடமாற்று வசதியும் அடங்கியுள்ளதாகவும், இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## 988 சிறைக்கைதிகளுக்கு...

வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, இந்தக் கைதிகளுக்கு ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதிகளவான கைதிகள் பல்லேகலையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இங்கிருந்து 225 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

39 கைதிகள் பூஸா சிறைச்சாலையிலிருந்தும் 32 கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வாரியபொல சிறைச்சாலையிலிருந்து 21 கைதிகளும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 19 கைதிகளும் வவுனியா சிறைச்சாலையிலிருந்து 17 கைதிகளும் திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து 9 கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சட்டவிரோதக் கூட்டம், கொள்ளை, வீடு புகுந்து திருடல், தேசத்துரோகம் மற்றும் கடத்தல் குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள், ஜனாதிபதி பொதுமன்னிப்புக்கு தகுதியற்றவர்கள் எனக் கருதப்பட்டுள்ளது.

இதன்போது, அபராதம் செலுத்த முடியாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களே அதிகளவில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## 12 இலட்சம் ரூபா போலி...

5,000 ரூபா மற்றும் 500 ரூபா போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களில் ஒருவர் பல்கலைக்கழக மாணவரென்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதுடன், இருவரும் குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## ஆட்டோ சாரதிகளை ...

பருத்தித்துறையிலிருந்து நேற்று முன்தினம் (04) முச்சக்கரவண்டியொன்றை வாடகைக்கு அமர்த்தி கீரிமலையிலுள்ள காணிகளை பார்க்கவென்று ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் கீரிமலைக்கு சென்றுள்ளனர்.

கீரிமலையில் அம்முச்சக்கரவண்டிச் சாரதிக்கு குளிர்பானத்துக்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்துவிட்டு, சாரதியிடமிருந்து பணம் மற்றும் நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு இவர்கள் சென்றுள்ளனர்.

இதன் பின்னர் இந்தக் கும்பல், கீரிமலையிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்ல மற்றுமொரு முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்தி, பருத்தித்துறைக்குச் செல்லும் வழியில் அம்முச்சக்கரவண்டிச் சாரதிக்கும் குளிர்பானத்துக்குள் மயக்க மருந்து கலந்து கொடுத்துவிட்டு சாரதியிடமிருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கீரிமலையில் மயக்கமடைந்த முச்சக்கரவண்டிச் சாரதி தெல்லிப்பழை வைத்தியசாலையிலும் மற்றையவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தொல்பொருள் வரலாற்று...

எதிர்பார்த்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள இந்த சிவாலயங்கள் தொடர்பில் ஆராய்ந்து, அவற்றை தொல்பொருள் அடையாளங்களாக பாதுகாக்கத் தீர்மானித்துள்ளதுடன், இவை சர்வதேச ரீதியில் பாதுகாக்கப்பட வேண்டிய சொத்துகள் எனவும், அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், பொருளாதார ரீதியில் நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளால், சிவாலயங்களை பாதுகாப்பது தொடர்பான திட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக சர்வதேச ரீதியில் செயற்படும் இந்து அமைப்புகள், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்களை தம்முடன் கைகோர்க்குமாறும், அமைச்சர் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

## கஜுகமவில் இரு பஸ்கள்...

தனியார் பஸ், வளைவில் மற்றுமொரு வாகனத்தை முந்திச் சென்று முன்னால் சென்ற இ.போ.ச பஸ்ஸுடன் மோதி விபத்து இடம்பெற்றதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் இரண்டு பஸ் சாரதிகள் அடங்குவதுடன், காயமடைந்த அனைவரும் வத்துபிட்டியல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் இரண்டு பஸ்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லையென, வத்துபிட்டியல வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விபத்துத் தொடர்பாக நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள ராஜபக்ஷ, பொலிஸ் சார்ஜன்ட் சுமேதா மற்றும் ஏனைய அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## 03ஆம் சார்ள்ஸ்...

சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் தினுக் கொலம்பகே ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்றுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதியின் பாரியார் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு பிரிட்டனுக்குச் சென்றுள்ளதுடன், மூன்றாவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் ஜனாதிபதியுடன் அவர் பங்கேற்கிறார்.

மூன்றாவது சார்ள்ஸ் மன்னரின் தாயாரான மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழா 1952ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றது. அதில் ஜனாதிபதி ரணிலின் தந்தை எஸ்மண்ட் விக்கிரமசிங்க மற்றும் தாயாரான நாலனி விக்கிரமசிங்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதனை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, சுமார் 70 ஆண்டுகாலம் ஐக்கிய இராச்சியத்தின் அரியணையை அலங்கரித்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில், தனது முடிசூட்டு விழாவில் பங்கேற்குமாறு மூன்றாவது சார்ள்ஸ் மன்னர் அழைப்பு விடுத்ததாக தெரிவித்தார்.

## M.S.செல்வராஜா...

பெற்று வந்த போதே காலமானதாக, அவரது உறவினர்கள் தெரிவித்தனர். அவரது பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக நாளை (07) வரை கொழும்பு, பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்படுமென்பதுடன், ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இவரது இறுதி ஊர்வலம் நடைபெற்று, பொரளை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முன்னணி இசையமைப்பாளராக விளங்கிய இவர், தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பல மெல்லிசைப் பாடல்களுக்கு இசையமைத்துள்ளார். 'அவள் ஒரு ஜீவநதி' என்ற இலங்கையின் தமிழ்த் திரைப்படத்துக்கும் 'கேசர சிங்ஹயோ' என்ற சிங்களத் திரைப்படத்துக்கும் இவர் இசையமைத்துள்ளார்.

## கிரிக்கெட் அணியை தாக்கிய...

இக்பால், அல்கொய்தா மற்றும் தெஹ்ரீக்இதலிபான் பாகிஸ்தான் (TTP) கயாரா குழுவில் உறுப்பினராக செயற்பட்டார் என்பதுடன், இவர் பாகிஸ்தானில் மிகவும் தேடப்படும் ஒருவராக அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கைபர்பக்துன்க்வா மற்றும் பஞ்சாப் பொலிஸார், இவரை உயிருடன் பிடிக்க உதவுவோருக்கு 10.5 மில்லியன் இந்திய ரூபாய்களை வெகுமதியாக வழங்குவதாக அறிவித்திருந்தனர்.

கைபர்பக்துன்க்வா பொலிஸ் தலைமையதிகாரி அக்தர் ஹயாத் கான் தெரிவித்த போது, தேடுதல் ஒன்றின் போது இக்பால், பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். பதிலுக்கு பொலிஸார் தாக்குதல் நடத்திய போது இவர் கொல்லப்பட்டுள்ளார் என்றார்.

இக்பால் 26 பயங்கரவாத வழக்குகள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட கொலைகளில் தேடப்பட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க, 2009 இல் லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி மீதான தாக்குதலிலும் இக்பால் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இலங்கை கிரிக்கெட் அணி மீதான தாக்குதலில் 7 பொலிஸார் கொல்லப்பட்டதுடன் மஹேல ஜயவர்த்தன, குமார் சங்கக்கார, அஜந்த மெண்டிஸ், திலன் சமரவீர, தரங்க பரணவிதான மற்றும் சமிந்த வாஸ் உட்பட ஏழு வீரர்கள் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் காரணமாக, பல ஆண்டுகளாக பாகிஸ்தானின் மண்ணில் சர்வதேச கிரிக்கெட் மற்றும் விளையாட்டுகளை நடத்த முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட் தொற்று குறித்து...

விசேட ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"கொவிட்19 தொற்று, 2019 வருட இறுதியில் உலகளாவிய ரீதியில் பரவிய தொற்றுநோயாகக் காணப்பட்டது. எனினும், இது இன்னும் முற்றாக உலகிலிருந்து இல்லாமல் போகவில்லை.

இந்நிலையில், நாடு என்ற வகையில் கொவிட்19 தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுத்து, இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தோம். 2021 ஆரம்பத்தில் எமது நாட்டில் நாளாந்தம் 6 ஆயிரம் பேர்வரை கொவிட்19 தொற்றுக்குள்ளாகி வந்தனர்.

என்றாலும், வருட இறுதியாகிய போது அதனை 5 பேர் வரை குறைக்க முடிந்தது. 2022 பெப்ரவரியில் நாளாந்தம் 20 பேர் வரையே தொற்றுக்குள்ளாகி வந்தனர்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை முறையாக மேற்கொண்டதால், அதனை எமக்கு கட்டுப்படுத்த முடிந்தது. அத்துடன், நாட்டின் மொத்த சனத்தொகையில் 70 சதவீதமானவர்கள் கொவிட்19க்கான இரண்டு தடுப்பூசிகளையும் போட்டதால், கொவிட் 19 மரணங்களை எமக்கு குறைக்க முடிந்தது.

தற்போது வாரத்துக்கு 2 அல்லது 3 கொவிட்19 மரணங்கள் இடம்பெறும் நிலையே இருக்கிறது. உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது, கொவிட்19 எச்சரிக்கை இன்னும் முற்றாக நீங்கவில்லை. என்றாலும், கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, கொவிட்19 தொற்றாளர்களை இனம் காண்பது முற்றாக நீங்கவில்லை.

எமது நாட்டிலும் ஒரு சில மாதங்களில் காலநிலை மாற்றத்துக்கேற்ப தொற்றாளர்கள் இனம் காணும் எண்ணிக்கை கூடும் குறையும் வகையில் இருக்கிறது. கடந்த 2 வாரங்களில் 6,7 பேர்வரை தொற்றாளர்கள் இனம் காணப்பட்டனர். என்றாலும், இது ஆபத்தான நிலை எனத் தெரிவிக்க முடியாது.

மக்கள் தொடர்ந்து சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும். குறிப்பாக, இக்காலப்பகுதியில் இருமல், தடிமன் அதிகரித்துக் காணப்படுகிறது. அதற்காக, கொவிட்19 என தீர்மானிக்க முடியாது.

சமூக பொறுப்பு என்ற வகையில் இவ்வாறான நோயுடையவர்கள் முகக்கவசம் அணிவதையும் சன நடமாட்டம் அதிகம் இருக்கும் இடங்களுக்கு செல்வதை தவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், கொவிட்19 மரணம் கடந்த 2 வாரங்களில் அதிகரித்திருப்பதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு எதுவும் இல்லை. சாதாரணமாக வேறு நோய்களுக்குள்ளாகி அவர்களுக்கு கொவிட்19 நிலையும் ஏற்பட்டதன் காரணமாக ஏற்பட்ட மரணங்களே இடம்பெற்றுள்ளன.

கொவிட் தொற்றாளர் என்று வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நிலை இதுவரை அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்படவில்லை. அதனால், இது தொடர்பாக வீணாக மக்கள் அச்சப்படத் தேவையில்லை.

மக்கள் எப்போதும் சுகாதார வழிகாட்டல்களை பேணி வந்தால், இவ்வாறான நோய் தொற்றுகளிலிருந்து பாதுகாப்பு பெற முடியும்" என்றார்.

பூநகரியில் குடிநீர் விநியோக திட்டம்

# நீர்விநியோக குழாய்களை விடுவிப்பதற்கு விசேட அமைச்சரவை பத்திரம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



கிளிநொ ச்சி பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரியில் குடிநீர் விநியோக நடவ டிக்கைகளை மேற்கொள் ளும் பொருட்டு துறைமுகத்தில் விடுவிக்கப்பட்ட குழாய்களை விடுவிக்க விசேட அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்படுமென கடற்றொழில் அமைச்சரும், கிளி நொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந் துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

பச்சிலைப்பள்ளி மற்றும் பூநக ரியின் சில பகுதிகளுக்கு குழாய் வழி குடிநீர் விநியோகம் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பொதுமக்கள் கடும் நெருக் கடிகளை சந்திக்கின்றனர்.

இப்பிரதேசங்களின் நீர்விநியோகத்துக்கென கொண்டுவரப்பட்ட குழாய்கள் நீண்டகாலமாக துறைமுகத்திலிருந்து விடு விக்கப்படவில்லையென அமைச்சரின் கவனத்திற்கு பொதுஅமைப்புகளின் பிர திநிதிகளால் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்தே இதுதொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து கருத்து தெரி விக்கையில், இவ்விடயம் தொடர் பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு, அடுத்த அமைச்சரவை கூட்டத்தின் போது துறைமுகத்திலுள்ள குழாய் களை விடுவிப்பதற்கு விசேட அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய் யப்படுமென அவர் தெரிவித்தார்.

பளையில் நீர்தாங்கி அமைக்கப்பட்டு தயார் நிலையில் காணப்படுகிறது. அத்தோடு பரந்தனிலிருந்து பளைக்கு குழாய்கள் பதித்து நீர் வழங்கல் நடவடிக்கை களை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டு ஒப் பந்தகாரர் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒப் பந்தகாரரும் பளைக்கு கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

எனவே குழாய்கள் கிடைக்குமி டத்து குறுகிய காலத்திற்கு பளை பிரதேச மக்களும் குழாய் வழி குடிநீரை பெற்றுக்கொள்ள முடி யுமென நீர்வழங்கல் சபையின் மாவட்ட பொறியியலாளர் தெரிவித் தார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு

# வடக்கு சிறைச்சாலைகளிலிருந்து பொது மன்னிப்பில் கைதிகள் விடுதலை

யாழ். விசேட, வவுனியா விசேட நிருபர்கள்

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், வவுனியா சிறைச்சா லைகளிலிருந்து பொது மன்னிப்பின் அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாண சிறைச் சாலையிலிருந்து 19 கைதிகளும் வவுனியா சிறைச்சாலையிலிருந்து 17 கைதிகளும் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

அதற்கமைய நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண சிறைச்சாலையிலிருந்து 19 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் தினத்தினை முன்னிட்டு, ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் அடிப்படையி லேயே இவர்கள் விடுதலை செய்யப் பட்டனர்.

சிறு குற்றங்கள், தண்டப்பணம் செலுத்த முடியாததால் சிறைத்தண் டனை அனுபவித்தவர்கள் உள்ளிட் டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.





கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.மறைமாவட்ட பேராயர் கலாநிதி யஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை ஆயர் இல்லத்தில் சந்தித்தார். சந்திப்பின் போது, சமகால அரசியல் நிலவரங்கள் மற்றும் முன்னெடுக்கப்படும் அரசியல் நலத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

(படம்; யாழ்.விசேட நிருபர் )

# காங்கேசன்துறை சாரணர் மாவட்ட புதிய ஆணையாளர் நியமனம்

சாவகச்சேரி விசேட நிருபர்

காங்கேசன்துறை சாரணர் மாவட் டத்துக்கு புதிய ஆணையாளராக திரு சங்கரப்பிள்ளை கிருபானந்தன் நிய மிக்கப்பட்டுள்ளார். உடுவில் கல்விக் கோட்டத்தின் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளரான இவர் கடந்த 29/04 அன்று தனக்கான நியமனக் கடி தத்தினை பிரதம சாரண ஆணையாள ரிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளார். காங்கேசன்துறை சாரணர் மாவட்டத் தின் முன்னாள் ஆணையாளரது பத விக்காலம் கடந்த மார்ச் மாதம் நிறை வடைந்துள்ள நிலையில் தற்போது புதிய ஆணையாளர் நியமிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். தையிட்டியில் மூன்றாவது நாளாகவும் தொடரும் போராட்டம்

## விகாரை வழிபாடுகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைதான ஐவருக்கு பிணை

யாழ்.விசேட நிருபர்

வலிகாமம் வடக்கு தையிட்டி பகுதியில் தனியார் காணியொன்றில் புதிதாக அமைக்கப் பட்ட விகாரையை அங்கிருந்து அகற்றுமாறு கோரி கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் மூன்றாவது நாளாகவும் நேற்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் புதன்கிழமை இரவு போராட்டம் நடைபெறும் விகாரைக்கு முன்பாக வெளியாட்கள் செல்ல முடி யாதவாறு தடை ஏற்படுத்தியிருந்தனர். அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உணவு, நீர் வழங்கவும் பொலிஸார் அனுமதிக்கவில்லை. மனிதவுரிமை ஆணைக்குழுவின் அழுத்தம் கார ணமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 1. 30 மணியளவில், போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு உணவு, நீர் வழங்க பொலிஸார் அனுமதித்தனர்.

இந்நிலையில் தையிட்டி விகாரைக்கு அருகில் பலாலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பெண் உள்ளிட்ட ஐவரை பிணையில் செல்ல மல் லாகம் நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.



தையிட்டி விகாரையை அகற்றுமாறு கோரி கடந்த புதன்கிழமை தொடக்கம் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டு வந்தது. இதில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பெண்ணொருவர் உள்ளிட்ட ஐவரை பலாலி பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட ஐவரையும் நேற்றுமுன்தி னம் வியாழக்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன் றில் பொலிஸார் ஆஜர்ப்படுத்தினர். இதன்போது இடம்பெற்ற விசாரணைகளை தொடர்ந்து அவர் கள் ஐவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்ததுடன் வழக்கினை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு மாற்ற நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலி ருந்து பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் , சி.சிறிதரன் , த.சித் தார்த்தன் ஆகியோரிடன் சுதந்திர கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் வெளிநடப்பு செய்து, போராட்ட களத் திற்கு நேரில் சென்று ஆதரவு வழங்கினர்.

அதேவேளை விகாரைக்கோ , விகாரைக்கு வரு வோருக்கோ, விகாரையில் நடைபெறும் உற்சவத் திற்கோ எந்தவிதமான இடையூறும் ஏற்படுத்தாது அமைதியான வழியில் போராட்டங்களை முன் னெடுக்க முடியுமென மல்லாகம் நீதவான் நீதிமன் றம் கட்டளையிட்டதைத் தொடர்ந்து நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# இலங்கை மண்ணில் நிலையான அமைதி மலர அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



"அமைதியைவிட உயர்வான சந் தோசம் இந்த பூமியில் வேறொன் றும் இல்லை" என புத்தபெருமான் போதித்துள்ளார்.

எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை சீர்செய்து, நாட்டை மீட்கவும், இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக் கக்கூடிய தீர்வைக்கண்டு இலங்கை மண்ணில் நிலையான அமைதி மலரவும் நாம் அனைவரும் ஒன்றி ணைந்து செயற்படுவோம்." என இலங்கை தொழிலாளர் காங்கிர ஸின் பொதுச்செயலாளரும், அமைச் சருமான ஜீவன் தொண்டமான் தெரி வித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வெசாக் தின வாழ்த்து செய் தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

" போதிமாதவன் புத்தபெ ருமானின் பிறப்பு, இறப்பு, பரிநிர்வாணம் அடைந் தமை ஆகிய முக்கிய நிகழ் வுகளை நினைவு கூருவதற்கே விசாக நோன்மதி வெசாக் நோன்மதி தினத்தை உலகவாழ் பௌத்தர்கள் வெகுசிறப்பாக கொண்டாடி வரு கின்றனர். இலங்கையிலும் பக்திபூர் வமான முறையில் பல நிகழ்வுகள் நடைபெறும். கொரோனா பெருந்தொற்று, அரசியல் நெருக்கடி மற்றும் வரிசை யுகம் இல்லாது செய்யப்பட் டுள்ள நிலையில் இலங்கை யில் இம்முறை வெசாக் தின நிகழ்வுகள் பிரமாண்டமாக இடம்பெறவுள்ளன.

வெசாக் காலப்பகுதி யில் ஊர், கிராமங்கள் , நகரங்களில் வாழும் மக்கள் ஒன்றிணைவார் கள். ஒற்றுமையுடன் அலங்கார தோரணங்களை அமைப்பார்கள். உதவிகளை திரட்டி தானம் வழங்கு வார்கள். ஒற்றுமை, ஐக்கியம் என்ப வற்றின் பலத்தை இதன்மூலம் நாம் காண முடியும்.

ஆகவே, நம் நாட்டை மீட்க வும் இவ்வாறு அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை. அடுத்த வெசாக் தினத்தை இதைவிடவும் சிறப்பான சூழ்நிலையில் கொண்டாடுவதற்கு வேண்டுமெனில் அரசியல், கட்சி வேறுபாடுகளை துறந்து நாம் அனை வரும் இலங்கையர்களாக ஒன்றி ணைய வேண்டும். இதய சுத்தியுடன் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காண முன்வர வேண்டும் அவர் தெரிவித்துள்ளார்.

# மகளுக்கு நஞ்சு பருக்கிய குற்றச்சாட்டில் தந்தை கைது

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

மஸ்கெலிய பொலிஸ் பிரிவுக்குட் பட்ட மொக்கா தோட்டப்பிரிவில் தந் தையொருவர் தனது 20 வயதுடைய மகளுக்கு நஞ்சு பருக்கிய குற்றச்சாட் டில் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட் டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார். இச்சம்பவம் மொக்கா தோட்ட மேற்பிரிவில் நேற்றுமுன்தி னம் இரவு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நஞ்சு பருக் கிய நிலையில் மஸ்கெலியா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு யுவதி கொண்டு செல்லப்பட்டுள் ளார். அங்கு சிகிச்சை பெற்று வந்த போதே தனது தந்தை தனக்கு நஞ்சு பருக்கியதாக யுவதி கூறியுள்ளார். அதனை தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார பணிப்புரையின் கீழ் சந் தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் சட்ட வைத்திய அதிகாரி, இளம் யுவதி பாலியல் துஷ்பிரயோ கத்துக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரு வதாக சட்ட வைத்திய அதிகாரி தெரி வித்தார்.

இச்சம்பவம் குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவிக்கையில், சம் பந்தப்பட்ட யுவதியின் தாய் கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றுள்ளார். அவருக்கு மூன்று பெண் பிள்ளைகள். அவர்கள் 9,11,20 வயதுகளையுடையவர்கள். எனினும் தந்தையின் பாதுகாப்பில் விட்டு விட்டு தாய் வெளிநாடு சென்றுள் ளார்.



வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் ஹற்றனில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. படம்; ஹற்றன் விசேட நிருபர்

# வீடு உடைத்து திருட்டு

எம்.ஏ.அமீனுல்லா

அலவத்துக்கொட பொலிஸ் பிரி வுக்குட்பட்ட வரகஸ்தென்ன பகுதி யில் வீடொன்றை உடைத்து பணம் மற்றும் தங்கநகைகளை திருடிய சம் பவம் தொடர்பில் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். 19 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம், தங்கநகைகள் என்பன திருடப்பட்டுள்ளன. கடந்த 3ஆம் திகதி மாலை 6.30–8.30க்கு இடையில் சத்திரலியத்த பிரதேசத் தில் வசிக்கும் தமது பெற்றோரைப் பார்ப்பதற்காக சென்றிருந்த வேளை யிலேயே இச்சம்பவம் இடம்பெற் றுள்ளது. எனினும் எந்தவித தடயமும் கிடைக்கவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

# சிவனொளிபாத யாத்திரை இன்றுடன் நிறைவு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

சிவனொளிபாத மலை (2022/2023 ஆம் ஆண்டுக்கான) புனித யாத்திரை இன்றுடன் (5) நிறைவு பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஸ்ரீபாத ஸ்தானாதிபதி சப்ரகமுவ மாகாண பிரதான சங்கநாயகர் பெங்கமுவே ஸ்ரீதம்மதித்த நாயக்க தேரர் இவ்வி டயத்தை உத்தியோகபூர்வமாக அறி வித்தார். அதற்கிணங்க தற்போது ஸ்ரீபாத விகாரையில் வைக்கப்பட் டுள்ள புத்தரின் புனித தந்தம் உட்பட புனித சிலையை தாங்கிய ஊர்வலம் இரண்டு வழிகளில் பாதுகாப்பாக எடுத்துவரப்படும்.

நல்லதண்ணி, அவிசாவளை இரத் தினபுரி வழியாக ஒரு ஊர்வலமும் பொகவந்தலாவ பலாங்கொடை வழியாக இன்னொரு ஊர்வலமும் இரண்டு வழிகளில் செல்லவுள் ளது.

மலைச்சாரல்

# இறக்குவானை -காலி வீதியில் மண்சரிவு அச்சுறுத்தல் அதிகரிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



இரத்தினபுரி மாவட்டத்தின் சூரி யகந்த தெனியாய வீதியில் மண்ச ரிவு அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக கொலன்ன பிரதேச செயலாளர் அமில விஜேரத்ன தெரிவித்தார்.

கொலன்ன பிரதேச செயலகப் பிரிவில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழை காரண மாக இந்நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். எனவே, இப்ப குதியில் அதிக மழை பெய்யுமிடத்து ஏற்கனவே மண்சரிவு இடம்பெறும் என அடையாளம் காட்டப்பட்ட பிர தேசங்களில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மண்சரிவு அபாயம் நிலவும் பிர தேசங்கள் தேசிய கட்டட ஆராய்ச்சி மையத்தால் ஆய்வுகள் நடத்தப்பட்டு அடையாளம் காணப்பட்ட பிரதே சங்களாகும். எனினும் இப்பிரதேசங் களில் வாழும் பொதுமக்கள் இதை பொருட்படுத்தாமல் இவ்விடங்க ளில் வாழ்ந்து வருகின்றனர். எனவே உயிர், உடைமை சேதங்களைக் கருத் திற்கொண்டு பொதுமக்கள் இவ்வி டங்களில் வசிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

ஏ 17 வீதியில் மண்சரிவு ஏற்பட் டால் காலி இரத்தினபுரி இறக்குவான மாதம்பையுடன் தொடர்புடைய பகு திகளுக்கான போக்குவரத்து தடைப்ப டுமென இரத்தினபுரி இடர்முகாமைத் துவ மத்திய நிலையம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன அறிவித்துள்ளன. சில தினங்களுக்கு முன்னர் இவ்வீதியில் இடம்பெற்ற மண்சரிவினால் பிரதேச போக்குவ ரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந் தது.

# தலவாக்கலை சென். கிளேயார் த.ம. வித்தியாலயத்துக்கு புதிய அதிபர்

தலவாக்கலை குறூப் நிருபர்



நுவரெலியா கல்வி வல யத்துக்குட்பட்ட தலவாக் கலை சென்.கிளேயார் தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக வேலாயுதம் தினகரன் நியமிக்கப்பட்டுள் ளார். அவருக்கான நியமன கடிதம் நுவரெலியா வலய கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண மற்றும் கல்வி அபிவிருத்தி பணிப்பாளர் கணேஸ் ராஜ் ஆகியோரால் வழங்கப்பட்டது. வேலாயுதம் தினகரன் பத்தனை கெலி வத்தையைச் சேர்ந்த வேலாயுதம் மாரியாய் தம்பதியினரின் மூன்றாவது புதல்வர் ஆவார். இவர் தனது ஆரம் பக் கல்வியை கெலிவத்தை தமிழ் வித்தியாலயத்திலும், இடைநிலை கல்வியை திம்புள்ள தமிழ் மகா வித் தியாலயத்திலும், உயர்தர கல்வியை தலவாக்கலை தமிழ் மகா வித்தியா லயத்திலும் கற்றார். கொட்டகலை யதன்சைட் ஆசிரியர் பயிற்சி கலா சாலையில் விவசாய விஞ்ஞான பாட ஆசிரியராக தனது ஆசிரியர் பயிற்சியை முடித்து கொத்மலை குயின்ஸ்பெரி தமிழ் வித்தியாலயம், கொத்மலை கெட்டபுலா தமிழ் மகா வித்தியாலயம் , தலவாக்கலை சென். கிளையார் தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராக வும் உதவி அதிபராகவும் பணியாற்றி யுள்ளார்.

# கிழக்கின் குரல்



## மூதூர் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் டெங்கு நோய்க்குள்ளாவோர் அதிகரிப்பு

### மூதூர் சுகாதார வைத்தியதிகாரி முகைதீன் பாவா

**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் சுகாதார வைத்தியதிகாரி பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோயார்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாக மூதூர் சுகாதார வைத்தியதிகாரி முகைதீன் பாவா ஹில்மி தெரிவித்தார்.

தற்போது பெய்து கொண்டிருக்கும் திடீர் மழையினால்

நோயாளர்களின் எண்ணிக்கை 65 ஆக அதிகரித்துள்ளதால் அனைவரும் "முன்னாயத்த" வேலைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்காக அந்தந்தப் பிரதேசங்களின் சமூக அமைப்புக்கள், நலன் விரும்பிகள் பங்கெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன் முதல் நிகழ்வாக தோப்பூர் பொது சுகாதார பரிசோதகரின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (6) தோப்பூர் முழுவதும் 25 இற்கும் மேற்பட்ட சுகாதார உத்தியோகத்தர்கள் இணைந்து டெங்கு கள பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த காலங்களில் ஊரவர்களின் ஒத்துழைப்பு மூலம் டெங்கு பரவலை கட்டுப்படுத்தியது போன்று இவ்வருடமும் பொதுமக்கள் ஒத்துழைப்பின் மூலம் டெங்கு பரவலை தடுக்க அனைவரும் ஒத்துழைப்பை வழங்கி சூழலை சுத்தம் செய்வோம்.

## விபத்தில் சிக்கிய குடும்பப்பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

**மண்டூர் திகரன் நிருபர்**

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காத்தான்குடி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சிக்கிய குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி (03) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோவில் போரதீவு பெரியபோரதீவு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான சிவானந்தம் யோகேஸ்வரி வயது (51) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த வாரம் தனது வீட்டிலிருந்து மட்டக்களப்பு பிரதேசத்திற்கு உறவினர் ஒருவரின் மரண வீட்டிற்கு தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது ஆரையம்பதி தனியார் ஆடைத்தொழிச்சாலை பயணிகள் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தனியார் பேருந்து மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி (03) உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்ணகிபுர வீதியில் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறி மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் நேற்று முன்தினம் (04)வியாழக்கிழமை ஆஜர்படுத்திய போது 15,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.





வரலாற்றுச் சிறப்புமிகு அக்கரைப்பற்று பகுதி கருங்கொடித்தீவுறை அருள்மிகு பெரிய பிள்ளையார் ஆலயத்தின் (ஸ்ரீ சித்திவிநாயகர் மகாதேவஸ்தானம்) சமுத்திர தீர்த்தோற்வசம் நேற்று நடைபெற்றது. சித்திரா பௌர்ணமி பிரம்ம மகோற்சவ திருவிழாவை முன்னிட்டதாக 21 அடி உயரமாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரோட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில் நேற்று காலை தீர்த்தோற்வச கிரியைகள் ஆரம்பமானது.
படங்கள் வாச்சிக்குடா விஷேட நிருபர்



கல்முனை கல்வி வலயத்தின் காரைதீவு கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவில் (03) அண்மையில் ஓய்வு பெற்ற உடற்கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் ஐ.எல்.எம். இப்றாஹிம் காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜெ.டேவிட்டினால் நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் அருகில் அதிபர் எம்.சுந்தரராஜன் ஆசிரிய ஆலோசகர் ரி.சிவநாதன் ஆகியோரை காணலாம்.
படம்: துறைநீலாவணை நிருபர்

## மாற்றுத்திறனாளிகளை தொழிலில் இணைப்பதற்கான செயலமர்வு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை மாவட்டதில் உள்ள மாற்றுத்திறனாளிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை தொழிலில் இணைப்பது தொடர்பான பயிற்சி பட்டறை திருகோணமலை J7 villa ஹோட்டலில் (04) நடைபெற்றது

நிகழ்வை சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் ஜெயிகா நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்திருந்ததுடன் மாற்றுத் திறனாளிகளில் இனங்காணப்பட்ட தொழில் செய்யக் கூடியவர்களை தொழிலுக்கு அமர்த்தி வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய திட்டமே இந்த திட்டமாகும்.

இதில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பகுதிகளிலும் உள்ள தனியார் துறை நிறுவனங்கள்,சுற்றுலாத் துறை உள்ளிட்ட பல துறைகளிலும் வேலை வாய்ப்பினை பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்து வாழ்வாதாரத்தை முன்னேற்றும் ஒரு திட்டமாகவும் இது விளங்குகிறது.

குறித்த செயலமர்வுக்கு வளவாளராக ஜெயிக்கா நிறுவனத்தின் ஜப்பான் நாட்டுப் பிரதிநிதி கலந்து கொண்டார். கடந்த காலங்களில் மாற்றுத் திறனாளிகளின் தொழில் முன்னேற்ற அறிக்கை மற்றும் புதிதாக தொழிலில் இணைப்பது தொடர்பிலும் கலந்துரையாடல்களும் விடய ஆய்வு தொடர்பான அனுபவப் பகிர்வுகளும் இடம் பெற்றன.

## மூத்த குடிமகன் காந்தி ஐயாவின் இன்று நினைவுப் பேருரை நிகழ்வு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்ட காந்தி சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் காந்திப் பெரியார் மூத்த குடிமகன் காந்திஐயாவின் நினைவுப் பேருரையும், அஞ்சலியும் நிகழ்வானது இன்று (06) சனிக்கிழமையன்று மாலை 4.30 மணிக்கு திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

காந்தி சேவை சங்கத்தின் தலைவர் ந.புகேந்திரன் தலைமையிலான இந் நிகழ்வில், திருகோணமலை பத்திரகாளியம்பாள் ஆலய தேவஸ்தான குரு வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் ஆசியுரையும், சிறப்பு விருந்தினராக ஆங்கில எழுத்தாளர் வரதசுந்தரம் கலந்து கொள்வதோடு மற்றும் இலக்கிய வாதிகள், மூத்த கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொள்கின்றனர்.

## காத்தான்குடி புராதன நூதனசாலையை பார்வையிடும் நேரங்களில் மாற்றம்

**புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்**



காத்தான்குடி புராதன நூதனசாலையினை பார்வையிடும் நேரங்களில் இன்று முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகர சபை அறிவித்துள்ளது.

திங்கள் முதல் வியாழன் வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரையும்.

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரையும் பொதுமக்கள் பார்வையிட முடியும் என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

## மூதூர் மத்திய கல்லூரியின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு கூட்டம் நாளை

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யின் 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் தெரிவுக்கான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை (07) ஆம் திகதி கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.தர்ஜுன் தலைமையில் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெற உள்ளது. மேலும் இக்கூட்டத்தில் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மற்றும் பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட உள்ளதுடன் புதிய நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட உள்ளன. இக்கூட்டத்தில் மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என அனைவரும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## தரம் 6 இற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



**தோப்பூர் குறூப் நிருபர்**

தோப்பூர் கோட்டத்திற்குட்பட்ட அல் ஹம்றா மத்திய கல்லூரியில் தரம் 6 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வு கல்லூரியின் முதல்வர் எஸ்.எம்.றஹீம் தலைமையில் (4) நடைபெற்றது.

புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்றதோடு ஆசிரியர்கள் இனிப்புகள் வழங்கி வரவேற்றேனர். இந்நிகழ்வில் மாணவர்களின் நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மூதூர் வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.எச். மொஜீத் மற்றும் விசேட விருந்தினர்களாக றோயல் ஜுனியர் வித்தியாலய அதிபர் எம்.எம்.மர்சூக், அல் அமான் வித்தியாலய அதிபர் எம்.டபள்யூ. நௌபர், அல் சாஹீர் வித்தியாலய அதிபர் அனஸ் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் 14 கைதிகள் விடுதலை

**கல்லடி குறூப் நிருபர்**



வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் நேற்று (05) மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 14 ஆண் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பிரதம ஜெயிலர் உள்ளிட்ட சிறைச்சாலையின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த தண்டப்பணம் செலுத்தாத கைதிகளே இவ்வாறு இலங்கை பூராகவும் உள்ள சிறைகளில் இருந்கு 988 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹபரணை விபத்தில் ஒருவர் பலி, ஒருவர் படுகாயம்

**கிண்ணியா மத்திய நிருபர் கியாஸ்**

ஹபரணை, கொழும்பு வீதியில் நேற்று முன்தினம் (4) மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், ஒருவர் உயிரிழந்து ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிண்ணியா மாலிந்துறையை சேர்ந்த முகம்மது இஸ்மாயில் முகம்மது இஸாம் (வயது 43) என்ற குடும்பஸ்தரே இந்த விபத்தில் உயிரிழந்தவராவார்.செய்யது முஹம்மது முஹம்மது றியாஸ் (வயது 40) என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த, மோட்டார் சைக்கிள் வளைவு ஒன்றில் இருந்த மின் கம்பத்துடன் மோதியே விபத்து நடந்துள்ளது. விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.






## வெசாக்கை முன்னிட்டு சவளக்கடை பொலிஸ் நிலையத்தில் தன்சல்

**சவளக்கடை குறூப் நிருபர்**

வெசாக் வாரத்தை முன்னிட்டு சவளக்கடை பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கடலை தான்சல் சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.கே.தசநாயக்கா தலைமையில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று(05) நடைபெற்றது. பொதுமக்களுக்கும், பொலிசாருக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் வெசாக் தன்சல் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல்.புத்திக, சமய தலைவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள், பொது மக்கள் என பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

நாவிதன்வெளி சுகாதர வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுகாதர பரிசோதர்களின் கண்காணிப்பில் தன்சல் இடம்பெற்றதுடன் பொலிஸ் வளாகம் அலங்கரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# தைவான் உற்பத்தி செய்யும் இராணுவ ட்ரோன்கள் அமெரிக்க ரடார் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

பாதுகாப்பு தொடர்பான ட்ரோன்களைத் தயாரிக்கும் 'தண்டர் டைகர்' என்ற தைவான் நிறுவனம், எதிரி இலக்குகளைத் துல்லியமாகக் கணிக்கும் மேம்பட்ட ரடார்களை உற்பத்தி செய்யும் அமெரிக்க நிறுவனமான உம்சாருடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

தான் தயாரித்துள்ள டி400 ரக ட்ரோன்களில் மேம்பட்ட ரடார்களை பயன்படுத்துவதன் மூலம் அதன் செயற்பாட்டுத்திறன் அதிகரிக்கு என்றும் தலைநகர் தைபேயில் செப்டெம்பரில் நடைபெறவுள்ள வான்பாதுகாப்பு தொழில்நுட்ப கண்காட்சியில் டி400 ட்ரோன்களை காட்சிக்கு வைப்பதன் மூலம் சர்வதேச அங்கீகாரத்தை பெற முடியும் என்று தண்டர் டைகர் வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தைவான் வான் பாதுகாப்பை மேலும் ஸ்திரப்படுத்தும் ஒரு முயற்சியாக இந் நிறுவனத்துடன் தைவான் இணைந்து செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் மிகச் சிறப்பாக இயங்கக்கூடிய ரடார்களை உருவாக்குவதில் உம்சார் நிறுவனம் அமெரிக்க இராணுவத்துடன் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விரு நிறுவனங்களும் ஏற்கனவே சோதனை முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

# காஷ்மீர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சந்தை வாய்ப்பு

காஷ்மீர் கிராமங்களைச் சேர்ந்த சுயதொழில் பெண்கள் தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தும் மற்றும் விற்பனை செய்யும் சந்தை ஒன்றை ஸ்ரீநகரில் பெண்கள் அமைப்பு ஒன்று ஏற்படுத்தித் தந்துள்ளது.

ஜம்மு – காஷ்மீர் கிராம வாழ்வியல் அமைப்பின் ஏற்பாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இச்சந்தையைப் பயன்படுத்தி தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவர் இவ்வாறான கண்காட்சி விற்பனைக் கூடங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும் என்றும் இதன்மூலம் கலைஞர்கள், கைவினைஞர்கள், பொருள் தயாரிப்பாளர்கள் பயன்பெறுவார்கள் என்றும் தமது பொருட்களுக்கு இதன்மூலம் விளம்பரம் கிடைக்கிறது என்றும் ஏ.என்.ஐ. செய்திச் சேவையிடம் தெரிவித்தார்.

ஞாயிறு தினம் நடைபெற்ற சந்தையில் பன்நாட்டு சுற்றுலா பயணிகளும் பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.

# வெலிப்பன்னை ரஹ்மானியா மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபர் நியமனம்

பேருவளை விசேட நிருபர்



மேமா/மது/வெலிப்பன்னை ரஹ்மானியா மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபராக அப்துல் ரஹ்மான் மொஹமட் நவுமான் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆரம்பக்கல்வி முதல் இடைநிலைக்கல்வி வரை மேமா/மது/வெலிப்பன்னை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் உயர் தரக் கல்வியை தர்கா நகர் சாஹிராக் கல்லூரியில் வணிகத்துறையிலும் கற்றுள்ள இவர் கல்விமாணிப்பட்டதாரியுமாவார்.

1998 முதல் 2002 வரை மேமா/மது/பாந்திய வித்தியாலயத்தில் ஆசிரியராக சேவையாற்றிய இவர் 2002 முதல் மேமா /மது /பலாந்தை முஸ்லிம் வித்தியாலயத்தில் பிரதி அதிபராகவும், 2005ம் ஆண்டு முதல் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அதிபராக கடமையாற்றிய எம். வை. கௌஸுல் அமீர் ஓய்வு பெற்றதையடுத்து புதிய அதிபராக மொஹமட் நவுமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஜேர்மன் Albert – Einstein–ஐன்ஸ்டீன் கல்லூரியுடன் மாணவர் பரிமாற்றம்

பேருவளை விசேட நிருபர்



பேருவளையில் உள்ள விஸ்டம் சர்வதேச கல்லூரி மூன்றாவது தடவையாக ஜேர்மனியில் பிராங்பேர்ட்டில் உள்ள Albert – Einstein ஐன்ஸ்டீன் கல்லூரியுடன் உற்சாகமான மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சியை தொடங்கியுள்ளது. மதிப்புமிக்க அறிவு மற்றும் திறன்களைப் பெறும்போது மாணவர்கள் தங்கள் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும் பல்வேறு கலாசாரங்களை அனுபவிப்பதற்கும் இந்த பரிமாற்றத் திட்டம் ஒரு விதிவிலக்கான வாய்ப்பாகும். பாடசாலை நிர்வாகத்தின் அயராத முயற்சியாலும், பல பயனாளிகளின் தாராளமான பங்களிப்புகளாலும் இத்திட்டம் சாத்தியமாகியுள்ளது.

சென்ற 29 ஏப்ரல் 2023, விஸ்டம் சர்வதேச பாடசாலை முகாமைத்துவ தலைவர் எம்.எச்.எம் பவ்ஸர் (நளீமி) மற்றும் நிர்வாக இயக்குநர் ஹாதிக் பவ்ஸர் உட்பட பதின்மூன்று மாணவர்களும் நான்கு அதிகாரிகளும் இந்த அருமையான நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக ஜெர்மனியில் உள்ள Frankfur நகருக்குச் விஜயம் செய்துள்ளனர். இக் குழு இரண்டு வாரங்களுக்கு அங்கு தங்கியிருப்பர். இதன் போது அவர்கள் Albert – Einstein பாடசாலை நிர்வாகிகள், அதிபர் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். எதிர்வரும் மே 13 திகதி நாடு திரும்புவர்.

மாணவர் பரிமாற்றத் திட்டம் என்பது மாணவர்களின் மாறுபட்ட கண்ணோட்டங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் கலாசாரங்களை வெளிப்படுத்தும் ஒரு விலைமதிப்பற்ற அனுபவமாகும். இது அவர்களின் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும் இன்றைய உலகளாவிய சமூகத்தில் வெற்றிக்கு இன்றியமையாத கலாசாரங்களுக்கு இடையிலான திறன்களை வளர்ப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது.

பரிமாற்ற திட்டம் என்பது விஸ்டம் இன்டர்நேஷனல் சர்வதேச கல்லூரி மற்றும் Albert – Einstein பாடசாலை இடையேயான கூட்டு முயற்சியாகும், இது 7 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இந்த கூட்டாண்மை மாணவர்களுக்கு தனித்துவமான கல்வி வாய்ப்புகளை வழங்கியுள்ளது, மேலும் சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் மிகவும் வலுவான கல்வி சூழலை உருவாக்குகிறது. பள்ளிகள் தங்கள் மாணவர்களுக்கு உலகளாவிய குடிமக்களாக இருக்க அவர்களைத் தயார்படுத்தும் செழுமையான கற்றல் அனுபவத்தை வழங்குவதற்கான பொதுவான இலக்கைப் பகிர்ந்து கொள்கின்றன.

# 'முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம்' ஆர். பி. எஸ். எல். கொன்சோட்டியம் அமைப்பின் கலந்துரையாடல்

மாவத்தகம தினகரன் நிருபர்

முஸ்லிம்களுடைய தேசிய, சமூக விவகாரங்களில் இந்நாட்டிலுள்ள படித்த புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள், சமூகவியலாளர்கள் கலந்து கொண்டு சமூக மேம்பாட்டுக்காக பங்காற்ற முன்வருதல் வேண்டும் என்று வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஆர். பி. எஸ். எல். கொன்சோட்டியம் அமைப்பின் முதலாவது வருடாந்த பொதுக் கூட்டம் மருதானை சாஹிராக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் வக்பு சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட இவ்வமைப்பின் ஸ்தாபகத் தலைவர்களுள் ஒருவரான வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி பிரதான உரையினை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வின் இரண்டாவது அமர்வு உப தலைவர் வஸீர் முக்தாரின் தலைமையில் "முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம்" என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெற்றது.



இந்தக் கருத்தரங்கின் போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா, முன்னாள் வெளிநாட்டுத் தூதுவரும் முன்னாள் கொழும்பு மாநகர முதல்வருமான உமர் காமில், தென்கிக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, முன்னாள் நீதிபதி ஜனாதிபதி சட்டத்தரணி சலீம் மர்சூப் ஆகியோர்கள் பங்கேற்றனர்.

சிறப்பு மார்க்கச் சொற்பொழிவினை பேருவளை ஜாமிய்யா நளீமியா கலாபீடத்தின் பணிப்பாளர் அகார் முஹமத் உரையாற்றினார். ஹக்கீம் அபூபக்கர் இந்நிகழ்ச்சியினை நெறிப்படுத்தினார். நன்றியுரையினை சட்டத்தரணி ரிஸ்வி மரைக்கார் நிகழ்த்தினார்.

இதன் போது பாகிஸ்தான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், முன்னாள் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எம். எம். எம். நாஜிம், பேராசிரியர் நௌபல், தொழிலதிபர் முஸ்லிம் சலாஹூதீன், முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி, முன்னாள் கண்டி மாநகர உப தவிசாளர் இலாஹி ஆப்தீன், உப தலைவர் சைபுதீன் ஹனிபா, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சாமிலா தாவூத், இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் பொறியியலாளர் எம். எம். எம் முனவ்வரா, பேராதனை பல்கலைக்ககழத்தின் புவியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் எம். எஸ். எம். ராசிக், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி தாசிம் உள்ளிட்ட இன்னும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# கண்டியில் மனித அபிவிருத்தி தாபனத்தின் உணவு நிவாரண வேலைத்திட்டம்

மாவத்தகம தினகரன் நிருபர்

இன்றைய சமூக, பொருளாதார நிலைமை பெரும் மாற்றத்தை தோற்றுவித்துள்ளது.

இதனால், இலங்கையில் கிராமிய, பெருந்தோட்ட, நகரத்தில் வாழும், வறுமைக்கோட்டிற்கு உள்ளான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். உணவு பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது.

இதனால் சிறுவர்கள், பெண்கள் மற்றும் சிறுமிகளே பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தப் பின்னணியிலேயே, மனித அபிவிருத்தி தாபனம், உணவு நிவாரண முயற்சி வேலைத் திட்டத்தை கனேடிய உதவியுடன் மேற்கொண்டு வருகின்றது என்று மனித அபிவிருத்தி தாபன நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம், கண்டி அரச அதிபர் காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் குறிப்பிட்டார்.

கண்டி பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட நகர்வாழ் வறுமைக்குட்பட்டோர்களுக்கு உணவு நிவாரணத்திற்கான முயற்சி திட்டத்தின் கீழ் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.



இவ்வேலைத்திட்டத்திற்கு கனேடிய அரசாங்கமும், தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு திட்டமும் உதவி வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கலாநிதி. பி.பி. சிவப்பிரகாசம் மேலும் குறிப்பிடும் போது,

மனித அபிவிருத்தி தாபனம், மேற்படி உணவு நிவாரண வேலைத்திட்டத்தை கிராமிய, பெருந்தோட்ட, நகர வறியோர் மத்தியில் செயற்படுத்தி வருகின்றது.

அவ்வடிப்படையில் கண்டி மாவட்ட மேலதிக அரச அதிபர் உப்பல ஜயரத்னவின் வழிகாட்டல் மற்றும் பிரதேச செயலாளர்களின் வழிகாட்டலில் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள், அங்கவீனர்கள், கர்ப்பிணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், வயோதிபர்கள் போன்ற சமூகத்தினர் அடையாளம் காணப்பட்டு உதவி செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறான உதவிகளை செய்யும் கனேடிய மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

# 292 மில். அமெரிக்க டொலர் செலவில் தெற்காசியாவின் மிகப்பெரிய தள வசதிகளை கொண்ட கட்டம் கொழும்பு துறைமுகத்தில்

## அமைச்சர் நிமல் தலைமையில் உடன்படிக்கை கைச்சாத்து

மர்லின் மரிக்கார்



கொழும்பு துறைமுகத்தில் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய தள வசதிகளைக் கொண்ட கட்டடத் தொகுதி 292 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதன் நிமித்தம் சீனாவின் மேச்சர்ன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனம் 70 வீதமும், இலங்கை துறைமுக அதிகார சபை 15 வீதமும், எக்ஸஸ் இன்ஜினியரிங் பி.எல்.சி நிறுவனம் 15 வீதமும் என்றபடி முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளன.

இந்த முதலீட்டுக்கான உடன்படிக்கை துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எட்டு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்படவிருக்கும் இக்கட்டடம், 530,000 சதுர அடிகளைக் கொண்டதாக விளங்கும்.

அரச மற்றும் தனியார் துறை முதலீட்டுடனான இத்திட்டம் கொழும்பு துறைமுகத்தின் மத்திய பகுதியில் அமையவுள்ளது.

இவ்வருட நடுப்பகுதியில் இக்கட்டடத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2025 இல் நிறைவு செய்யப்படவுள்ளது.



களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக திருமதி ஸாஜிதா கல்லூரி ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களின் பங்குபற்றலோடு பதவியேற்றுக் கொண்ட போது எடுக்கப்பட்ட படம்.

# புதிய கலீபதுல் குலபாவுக்கான நியமனக் கடிதம் கையளிப்பு

ஷாதுலிய்யா தரீக்காவின் புதிய இலங்கைக்கான கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள காலி அலிய்யா சட்டக்கல்லூரி பணிப்பாளரும் காலி மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் தலைவருமான சங்கைக்குரிய கலீபதுல் குலபா உஸ்தாத் மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் ஸூஹூர் ஆலிம் (பாரி) மற்றும் ஷாதுலிய்யா தரீக்காவின் குலபா ரயீஸுல் முகத்தமீன்கள், முகத்தமீன்கள் ஆகியோர்களுக்கான நியமன கடிதங்கள் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 14.05.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இலங்கையின் ஷாதுலிய்யா தரீக்கா தலைமை பீடமான கொழும்பு உம்மு ஸவாயாவில் அதன் நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து அல்ஹாஜ் மக்கி ஹாஷிம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஷாதுலிய்யா உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய ஷேகு ஸஜ்ஜாதா அஷ் ஷெய்க் முஹம்மத் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி அவர்களால் இலங்கைக்கான ஷாதுலி தரீக்காக்கான கலீபதுல் குலபா மற்றும் ரயீஸூல் முகத்தமீன்கள், மற்றும் முகத்தமீன்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபாவாக இருந்த மர்ஹூம் மௌலவி அல் ஹாஜ் ஜே. அப்துல் ஹமீத் (பஹ்ஜி) அவர்களின் மறைவிற்கு பின்னர் புதிய கலீபதுல் குலபாவாக மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் ஸூஹூர் ஆலிம் (பாரி) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வைபவத்தில் கொழும்பு உம்மு ஸாவியா நிர்வாக சபை உறுப்பினர்கள், கலீபாக்கள், உலமாக்கள், ஷாதுலிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொள்வர்.

# கராச்சி மக்கள் கணக்கெடுப்பை உடனடியாக நிறுத்துங்கள் எதிர்க்கட்சிகள் அரசிடம் கூட்டாக வேண்டுகோள்

தற்போது கராச்சியில் நடைபெற்று வரும் சனத்தொகை கணக்கெடுக்கும் பணிகளை உடனடியாக நிறுத்தும்படியும் அம்முறையில் காணப்படும் குறைகளைக் களைந்த பின்னர் திரும்பவும் கணக்கெடுப்பை ஆரம்பிக்கும்படியும் பாகிஸ்தானில் முக்கிய எதிர்க்கட்சிகள் பாக். அரசைக் கேட்டுள்ளன.

தரீக் ஐ இன்சாத் கட்சி கராச்சியில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் ஜமாத் ஐ இஸ்லாமி, ஜனநாயக பெருங் கூட்டணி, மஜ்லிஸ் விஹாதத் ஐ முஸ்லிமீன், வர்த்தக மற்றும் கைத்தொழில் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். ஆளும் மக்கள் கட்சியும் முதாஹிதா குவாமி அமைப்பும் இதில் கலந்து கொள்ளவில்லை.

இங்கு உரையாற்றிய முன்னாள் மத்திய வருவாய் திணைக்கள தலைவரான ஸபார் சைதி, நாட்டின் மத்தியத்தர வகுப்பை எண்ணிக்கையில் சேர்க்காமல் விடுவதற்கான தந்திரமே இதுவென்றும், படித்த நாகரிகம் மிக்க மத்தியதர சமூகம் கராச்சியில் பெருமளவில் வாழ்வதாகவும் இவர்களைத் தவிர்ப்பதையே இக் கணக்கெடுப்பு நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்றும் இவர் சுட்டிக் காட்டினார்.

தினகரன் வர்த்தக உலா

சமல் பாலுவிம்

# பிஸ்னஸ் டுடேயின் 40 முன்னணி நிறுவனங்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் கொமர்ஷல் வங்கிக்கு விருது

பிஸ்னஸ் டுடேயின் 40 முன்னணி நிறுவனங்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடமிருந்து இதற்கான விருதை கொமர்ஷல் வங்கி பெற்றுக் கொண்டது.



இதன் மூலம் தொடர்ந்து 14வது வருடமாக பிஸ்னஸ் டுடே தரப்படுத்தலில் கொமர்ஷல் வங்கி அதி உயர் தரப்படுத்தப்பட்ட வங்கியாகவும், இலங்கையில் ஒட்டு மொத்த சிறந்த செயற்பாடு மிக்க ஐந்து நிறுவனங்களில் ஒன்றாகவும் தெரிவாகி உள்ளது.

கம்பனிகளின் 2021-2022 பெறுபேறுகளின் தரப்படுத்தலின் அடிப்படையில் இத்தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

நாட்டில் காணப்படும் கொந்தளிப்பான நிலைமைகளின் மத்தியிலும் சாதகமான நிதி வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள சிறந்த கூட்டாண்மை செயற்பாடு மிக்க கம்பனிகளே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தரப்படுத்தப்பட்ட கம்பனிகளின் பன்முகத்தன்மை கொண்ட செயற்பாடுகளின் மதிப்பீடுகள் அவற்றின் இலாபங்கள் பற்றிய விரிவானதோர் காட்சியை வழங்குவதாகவும், மீண்டு வரும் தருணத்தில் அந்தக் கம்பனிகள் சுமந்து நின்ற ஆபத்துக்களையும், அவற்றின் ஈடுபாடு, அர்ப்பணம், சவால்களுக்கு பெருந்தன்மையோடு முகம் கொடுத்த நிலைமை என்பனவற்றையும் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கி நிற்பதாக தனது மதிப்பீடுகள் பற்றி பிஸ்னஸ் டுடே தெரிவித்துள்ளது.



டோக்கியோ சிமெந்து குழுமத்தினால் சினமன் கிராண்ட் மற்றும் கிங்ஸ்பரி ஹோட்டலில் இரண்டு பிரிவுகளாக ஏற்பாடு செய்யப்பட்ட 2023 ஆண்டு முகவர்கள் மாநாட்டில் சிறப்பாகச் செயல்படும் முகவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்பட்டன.



மூஸ் ஆடை நிறுவனம், சிங்கப்பூரில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனமான முஸ்தபா நிலையத்துடன் தங்களது சமீபத்திய கூட்டாண்மை மூலம் பிராண்டின் உலகளாவிய தடத்தை விரிவுபடுத்த மற்றொரு பாராட்டத்தக்க நகர்வை மேற்கொண்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது...

# Lovely Professional University உடன் கைகோர்த்தது சிங்கர்



சிங்கர் ஃபெஷன் அக்கடமி தனது மாணவர்களுக்கு பட்டப்படிப்பை வழங்குவதற்காக இந்தியாவின் *Lovely Professional University (LPU)* பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்தியுள்ள தனது கூட்டாண்மை தொடர்பில் அறிவித்துள்ளது.

சிங்கர் ஃபெஷன் அக்கடமி மாணவர்கள், சிங்கர் ஃபெஷன் அக்கடமியில் இரண்டரை வருட கால நவநாகரிக ஆடை வடிவமைப்பு கற்கைநெறியை நிறைவு செய்த பின்னர் *LPU* இடமிருந்து நவநாகரிக ஆடை வடிவமைப்பில் இளங்கலைப் பட்டப்படிப்பைத் தொடர இந்த கூட்டாண்மை இடமளிக்கும்.

இத்துறையில் 60 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள சிங்கர் ஃபெஷன் அக்கடமியானது தையல் மற்றும் நவநாகரிக ஆடை வடிவமைப்பில் எண்ணுக்கணக்கற்ற தொழில்முயற்சியாளர்களை உருவாக்கியுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தில் உள்ள பட்டய ஆடை வடிவமைப்பாளர் சங்கத்திடமிருந்து (*Chartered Society of Designers CSD*) கற்கைநெறி உறுதிப்படுத்தல் அங்கீகார அந்தஸ்தை இந்நாட்டில் முதன்முதலாகப் பெற்ற மற்றும் ஒரேயொரு நிறுவனம் இந்த அக்கடமி ஆகும்.

தொழில்துறையின் சந்தைப் போக்குகள் மற்றும் விசேட நிபுணத்துவத்தின் அவசியத்தை உணர்ந்து, சிங்கர் ஃபெஷன் அக்கடமியானது, மாணவர்களுக்கு மதிப்புமிக்க தொழில்துறை சார்ந்த சான்று அங்கீகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் எண்ணமே *Lovely Professional University* பல்கலைக்கழகத்துடன் ஒரு சிறந்த கூட்டாண்மையை ஏற்படுத்துவதைத் தூண்டியது.

*LPU* ஆனது இந்தியாவின் மிகப் பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்று என்பதுடன், இது நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களின் தர வரிசையில் தொடர்ந்து இடம்பெற்றுள்ளது.

உயர்தர கல்வி மற்றும் மாணவர் ஆதரவை வழங்குவதற்கான அர்ப்பணிப்புக்காக ஏராளமான விருதுகள் மற்றும் அங்கீகாரங்களைப் பெற்றுள்ளதால், *LPU* ஆனது நவநாகரிக ஆடை வடிவமைப்பில் கல்வியை மேற்கொள்வதற்கான சிறந்த நிறுவனங்களில் ஒன்றாகும்.

# DIMO Healthcare எனும் நாமத்தின் கீழ் தனது மருத்துவச் செயற்பாடுகளை தொடருகின்ற DIMO

இலங்கையில் முன்னணியிலுள்ள பல்வகைத் துறை கூட்டு நிறுவனமான *DIMO*, மருந்துகள் துறையில் அதன் சமீபத்திய விரிவாக்கத்தை மேற்கொண்டுள்ளதன் மூலம், *DIMO Healthcare* எனும் புதிய அடையாளத்தின் கீழ் அதன் சுகாதார துறை சார்ந்த செயல்பாடுகளையும் மறுசீரமைப்புக்கு உட்படுத்தியுள்ளது.

*Radiology, ophthalmology, neurology, cardiology, oncology* ஆகிய துறைகளில் கடந்த 7 தசாப்தங்களுக்கும் மேலாக அதிநவீன மருத்துவ உபகரணங்களை வழங்குவதன் மூலம் நாட்டின் சுகாதாரத் துறையில் *DIMO* முன்னணியில் உள்ளது.

நாட்டின் சுகாதாரப் பாதுகாப்புத் துறைக்கு அதிக மதிப்பைச் சேர்த்துள்ளது. இந்த சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில், *DIMO* சமீபத்தில் மருந்துத் தயாரிப்புகளிலும் அது விரிவாக்கத்தை மேற்கொண்டுள்ளது.




நிறுவனம் தனது மூலோபாய தொலைநோக்குப் பார்வையுடன், *Mansel Ceylon (Private) Limited* மற்றும் *Associated Laboratories (Private) Limited* ஆகிய நிறுவனங்களை சமீபத்தில் கையகப்படுத்தியதன் மூலம் மருந்துத் துறையில் விரிவாக்கத்தை மேற்கொண்டுள்ளது.

இந்த சமீபத்திய கையகப்படுத்தலின் மூலம், *Pain Management, Respiratory Disorders, Gastroenterology, Liver Diseases, Antibiotics, Endocrinology, Cardiovascular Antihistamine, Vitamins, Supplements, Neurology, Dermatology, Psychiatric treatment* போன்றவற்றிற்கான சிகிச்சைகளுக்கு மருந்து உற்பத்தியாளர்களிடமிருந்து 250 இற்கும் மேற்பட்ட மருந்து தயாரிப்புகளை வழங்குவதற்கு *DIMO Healthcare* உதவுகிறது.

# 9வது ஆண்டாக Soundbar சந்தையில் முதலிடத்தில் Samsung Soundbar

தொடர்ந்து 9 ஆண்டுகளாக உலகளாவிய விற்பனை சந்தையில் முதலிடத்தில் உள்ள Samsung Soundbar ஆராய்ச்சி நிறுவனமான FutureSource Consulting படி, Samsung Electronics உலகளாவிய Soundbar சந்தையில் முன்னணியில் மதிப்பிடப்பட்டுள்ளது. பெப்ரவரியில் வெளியிடப்பட்ட ஒரு புதிய அறிக்கையின்படி, Samsung 20.2% சந்தைப் பங்கைக் கொண்டு தொடர்ச்சியாக 9வது ஆண்டாக Soundbar சந்தையில் முதலிடத்தில் உள்ளதுடன் 2022 இல் இந்தத் துறையில் 18.4% விற்பனையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் என்றும் காட்டுகிறது.

பிரதான வரிசையில் பிரீமியம் Qseries உட்பட Samsung Soundbars சக்திவாய்ந்தவை மற்றும் தொழில்நுட்ப ரீதியாக உயர்தர ஒலியுடன் மேம்பட்டவை, தொலைக் காட்சிகளுக்கு உகந்தவை மற்றும் நேர்த்தியாகவும் நவீனமாகவும் இருக்கும். SpaceFit Sound போன்ற அம்சங்கள் அதன் தனித்துவமான ஒலி அனுபவத்திற்காக பாவனையாளர்கள் மற்றும் ஆய்வாளர்களால் பாராட்டப்பட்டுள்ளன.




உண்மையில், Samsung Soundbars தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்களின் இதயங்களை வென்றுள்ளன. HWQ990B ஆனது AVForums போன்ற விற்பனை நிலையங்களால் 2022 ஆம் ஆண்டின் "Best in Class" வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, HWS800B ஈர்க்கக்கூடிய ஒலியை வழங்குவதாக விமர்சகர்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்த ஆண்டு, Samsung வாடிக்கையாளர் மற்றும் Home Theater ஆர்வலர்களை ஒரே மாதிரியாக ஈர்க்கும் வகையில் மிகவும் அதிவேக சினிமா ஒலியை அறிமுகப்படுத்தியுள்ளது மற்றும் முதன்மை ஓடியோ அம்சங்களுடன் அதன் Soundbar வரிசையை புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்கிறது.

# செலிங்கோ லைஃப் பெண்களின் திறமைகள் மற்றும் குரல்களை வெளிப்படுத்தும் வகையில் மகளிர் தினத்தைக் கொண்டாடியது





செலிங்கோ லைஃப், இவ்வாண்டிற்கான சர்வதேச மகளிர் தினத்தின் உலகளாவிய கருப்பொருளை எதிரொலிக்கும் முகமாக, சமத்துவத்தைத் தழுவுதல், பெண் ஊழியர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் பணித்தளத்தில் தமக்கான உள்ளடக்கத்தை மேம்படுத்தக்கூடிய கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்குமான வாய்ப்பினை வழங்குதல் ஆகிய நெறிமுறைகளைப் பிரதிபலிக்கும் வகையில் நிகழ்வொன்றினை நடாத்தியது.

செலிங்கோ லைஃப் பணிப்பாளர் தெவான் குரே தனது உரையில், நிறுவனத்தின் வெற்றிக்குப் பெண் ஊழியர்களின் பங்களிப்பு மற்றும் சமூகத்திற்கு அவர்கள் சேர்க்கும் பெறுமதி என்பனவற்றைச் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், பணித்தளத்தில் பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இக் கொண்டாட்டத்திற்குத் தயாராகும் வகையில் செலிங்கோ லைஃப், நிறுவனத்திலுள்ள பெண்களை, கருப்பொருளுடன் இணைந்த ஆக்கப்பூர்வமான புகைப்படங்களைச் சமர்ப்பிக்குமாறு அழைத்திருந்தது.

இந்நிகழ்வானது, பங்கேற்பாளர்களின் தனித்துவமான முன்னோக்குகள் மற்றும் திறமைகளை சுட்டிக்காட்டுகின்ற மிகச் சிறந்த பதிவுகளின் காணொளித் தொகுப்பினையும் உள்ளடக்கியிருந்தது.

மிகவும் ஆக்கப்பூர்வமான புகைப்படங்கள் அங்கீகரிக்கப்பட்டு அவற்றுக்குப் பணப் பரிசுகளும் இக் கொண்டாட்டத்தின் போது வழங்கப்பட்டன.

அத்துடன், நிகழ்ச்சி நிரலில், நிறுவனத்தின் பொது முகாமையாளரும் பிரதம தரவு அதிகாரியுமான திருமதி. உபமாலிகா ரத்நாயக்க, வர்த்தக நாம முகாமையாளர் திருமதி. நிருஷா லக்ஷ்மிராஜ் மற்றும் வாடிக்கையாளர் சேவையின் சிரேஷ்ட உதவி முகாமையாளர் திருமதி. ருவினி டி சில்வா ஆகியோரின் தலைமையிலான குழுக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதோடு, வர்த்தக நாம மேம்பாட்டிற்கான சிரேஷ்ட முகாமையாளர் திருமதி. பிரமோதா சமரசிங்கவினால் இக்கலந்துரையாடல் நெறிப்படுத்தப்பட்டது.

மேலும் செலிங்கோ லைஃப்பின் வெள்ளவத்தைக் கிளை 02 இன் தலைமை அதிகாரி திருமதி. மீரா ஜனகன், தனது வாழ்க்கைப் பற்றியும் தனது இலக்குகளை அடைதல் மற்றும் வளர்ச்சிக்கான சம வாய்ப்புக்களை அணுகுதல் தொடர்பாக செலிங்கோ லைஃப் வழங்கிய உதவி பற்றியும் வலுவூட்டும் வகையில் விவரித்திருந்தார்.

# பிரபாத், ரமேஷ் முன்னேற்றம்

அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயல்பட்ட இலங்கை வீரர்களான பிரபாத் ஜயசூரிய மற்றும் ரமேஷ் மெண்டிஸ் உள்ளிட்ட வீரர்கள் ஐ.சி.சியின் டெஸ்ட் வீரர்களுக்கான புதிய தரவரிசையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

அயர்லாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சுழல் பந்துவீச்சில் சிறப்பாக செயல்பட்டு 17 விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட் வீழ்த்திய வீரர்களில் முதலிடத்தைப் பிடித்த பிரபாத் ஜயசூரிய, பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் 6 இடங்கள் முன்னேறி 13ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்த டெஸ்ட் தொடருக்கு முன்னதாக 32ஆவது இடத்தில் இருந்த ரமேஷ் மெண்டிஸ், அயர்லாந்து டெஸ்ட் தொடரில் 11 விக்கெட்டுகளை வீழ்த்தி டெஸ்ட் தரவரிசையில் 10 இடங்கள் முன்னேறி 22ஆவது இடத்தைப் பிடித்தார்.







அயர்லாந்து அணியுடனான 2ஆவது டெஸ்ட் போட்டியில் அதிவேக சதம் விளாசிய அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் தனது கன்னி இரட்டைச் சதம் விளாசி 245 ஓட்டங்களைக் குவித்த குசல் மெண்டிஸ் ஆகிய இருவரும் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரவரிசையின்படி முறையே 22ஆவது மற்றும் 39ஆவது இடங்களில் தொடர்ந்து உள்ளனர்.

இதனிடையே, நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 2 சதங்களைக் குவித்த பாகிஸ்தான் வீரர் பகர் சமான், ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் 8 இடங்கள் முன்னேறி 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஐ.சி.சியின் ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் பாகிஸ்தானின் பாபர் அசாம் தொடர்ந்து முதலிடத்திலும், தென்னாபிரிக்காவின் ரஸ்ஸி வென் டெர் டுசென் இரண்டாவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்துக்கும் சரிந்துள்ளார்.

# தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகள் நாளை தியகமவில்

இலங்கை மெய்வல்லுனர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 63ஆவது தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நாளை (07) முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை (10) நடைபெறவுள்ளது.

இரு பாலாருக்குமாக 4 வயதுப் பிரிவுகளில் நடைபெறவுள்ள இம்முறை தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் என நாடு முழுவதிலும் இருந்து 2,000க்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர்.

16 வயதின் கீழ், 18 வயதின் கீழ், 20 வயதின் கீழ், 23 வயதின் கீழ் என நான்கு வயதுப் பிரிவுகளில் மொத்தம் 99 போட்டி நிகழ்ச்சிகள் இம்முறை போட்டித் தொடரில் நடைபெறவுள்ளன. இதில் போட்டிகளின் முதல் நாளன்று 25 போட்டி நிகழ்ச்சிகளுக்கான இறுதிப்போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இதனிடையே, கடந்த ஆண்டைப் போன்று இம்முறை தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் 23 வயதுக்குட்பட்டவர்களுக்கு போட்டி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இலங்கை மெய்வல்லுனர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோன்று, எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ட்ரினிடாட் அண்ட் டொபேகோவில் நடைபெற்ற பொதுநலவாய இளையோர் விளையாட்டு விழாவுக்கு வீரர்களை தேர்ந்தெடுக்கின்ற ஒரு போட்டித் தொடராக இம்முறை தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் அமையவுள்ளது சிறப்பம்சமாகும்.

# இலங்கை அணி மீதான லாஹூர் தாக்குதலில் தொடர்புபட்டவர் பலி

பாகிஸ்தானில் 2009ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி மீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புட்டு தேடப்பட்டு வந்த பயங்கரவாதி இக்பால் என அழைக்கப்படும் பாலி கயாரா பொலிஸ் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெரா இஸ்மைல் கான் நகரில் பத்தா மூர் பகுதிக்கு அருகில் நடந்த தாக்குதலிலேயே இக்பால் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



அல் கொய்தா மற்றும் தஹ்ரீகே தலிபான் பாகிஸ்தான் அமைப்பின் உறுப்பினராக இருந்த இக்பால், கைபர் பக்துன்க்வா பிராந்தியத்தில் அதிகம் தேடப்படும் நபராக இருந்தவராவார். அவரது தலைக்கு பஞ்சாப் பொலிஸார் 10.5 மில்லியன் ரூபா விலை நிர்ணயித்திருந்தனர். லாஹூரில் இலங்கை அணி மீதான தாக்குதலில் ஏழு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டதோடு இலங்கை அணியின் மஹேல ஜயவர்தன, குமார் சங்கக்கார, அஜந்த மெண்டிஸ், திலான் சமரவீர, தரங்க பரணவிதான மற்றும் சமிந்த வாஸ் ஆகிய வீரர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானில் பல ஆண்டுகளாக கிரிக்கெட் மற்றும் ஏனைய சர்வதேச விளையாட்டுகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

# கொழும்பு அணிக்கு புதிய உரிமையாளர்

கொழும்பு மற்றும் நியூயோர்க் ஆகிய நகரங்களை தளமாக கொண்டு இயங்குகின்ற வியாபார நிறுவனங்களில் ஒன்றான SKKY குழுமம், லங்கா பிரீமியர் லீக் டி20 தொடரில் கொழும்பு அணிக்கு புதிய உரிமையாளர்களாக மாறியிருப்பதாக உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.




சாகர் கண்ணா தலைமையிலான இந்த நிறுவனம் கொழும்பு அணியின் புதிய உரிமையாளர்களாக மாறியுள்ள நிலையில், கொழும்பு அணி இந்தப் பருவத்திற்கான லங்கா பிரீதியர் லீக் தொடரில் கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை லங்கா பிரீமியர் லீக் தொடரினை நடாத்தும் உரிமத்தினை தம்மிடையே வைத்திருக்கும் ஐ.பீ.ஜி குழுமத்தின் தலைவர் அனில் மோகனும் புதிய உரிமையாளர்களை வரவேற்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு நான்காவது முறையாக நடைபெறவுள்ள லங்கா பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 22ஆம் திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# உலகிலேயே அதிக சம்பளம் பெறும் வீரர் ரொனால்டோ

உலகில் அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீரர்கள் பட்டியலில் போர்த்துக்கல் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ முதலிடத்தை பெற்றுள்ளார். போர்பஸ் சஞ்சிகை இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.



சவுதி அரேபியாவின் அல் நாசர் அணியில் சேர்ந்த பின்னர் அவரது வருடாந்த சம்பளம் சுமார் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. அவர் அல் நாசர் அணியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மதிப்பு சுமார் 219.98 மில்லியன் டொலர் என நம்பப்படுகிறது.

போர்பஸ் பட்டியலில் இரண்டாம் இடத்தில் லியோனல் மெஸ்ஸியும் மூன்றாம் இடத்தில் கிலியான் எம்பாப்பேயும் இடம்பிடித்துள்ளனர். இருவரும் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியைச் சேர்ந்தவர்கள்.

முன்னாள் டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் ஒருவர் மட்டுமே டென்னிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றும் போர்பஸ் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

# சோபர் அணி சம்பியன்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக் கழத்தின் ஏற்பாட்டில் 6 ஆவது தடவையாக நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தையும் 45 ஆயிரம் ரூபா பணப்பரிசினையும் வென்றது.



பைனா விளையாட்டுக் கழத்தின் தலைவர் எம்.ஜே. றுஜ்கான் ஜிப்ரி தலைமையில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை (04) இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று ரஹ்மியா விளையாட்டுக் கழகமும், அட்டாளைச்சேனை சோபர் கழகமும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ரஹ்மியா அணி 5 ஓவர் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 28 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சோபர் அணியினர் 2 விக்கெட்டினை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கையடைந்தது.

இச்சுற்றுப் போட்டியின் மூன்றாமிடத்தை அட்டாளைச்சேனை எவர் டொப்விளையாட்டுக்கழகம்வென்றது.

# மெஸ்ஸி, நெய்மாரின் பாதுகாப்பு அதிகரிப்பு

பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் கால்பந்து அணியின் பயிற்சித் தளத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

லீக்–1 போட்டியில் அதன் மோசமான முடிவுகளால் ஏமாற்றம் அடைந்துள்ள ரசிகர்கள் அணிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். நூற்றுக்கணக்கான ரசிகர்கள் கடந்த புதனன்று (03) அணியின் தலைமையகத்துக்கு வெளியே திரண்டனர்.

அவர்கள் தீயை வைத்துப் புகையைக் கிளப்பியதுடன் மெஸ்ஸி, நெய்மார், மார்க்கோ வெராட்டி ஆகிய வீரர்களை வசைபாடியதாகவும் கூறப்படுகிறது.




ரசிகர்களில் சிலர் கறுப்பு உடை அணிந்திருந்தனர். நெய்மாரின் வீட்டருகே சென்று 'நெய்மார், வெளியேறுங்கள்' என்றும் முழக்கமிட்டனர்.

ரசிகர்களின் இந்தச் செயலை பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் கண்டித்துள்ளது. இது ஏற்றுக்கொள்ளக் கூடிய செயல் அல்ல என்றும் அந்த அணி கூறியது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பயிற்சித்தளம், விளையாட்டாளர்களின் வீடுகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கடைசியாக நடந்த லீக்–1 ஆட்டத்தில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் சொந்த அரங்கில் 3–1 என லோரியென்ட் அணியிடம் தோல்வி கண்டது.

# மும்பையின் ரோஹித் ஷர்மா டக் அவுட்டில் புதிய சாதனை

மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் ஐ.பி.எல் தொடரில் அதிக முறை டக் அவுட்டில் ஆட்டமிழந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

மொஹாலியில் கடந்த வியாழனன்று (04) நடந்த ஐ.பி.எல் தொடரின் 46ஆவது லீக் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 214 ஓட்டங்களை குவித்தது. இதையடுத்து துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 18.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 216 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது.

இந்த ஆட்டம் மும்பை அணியின் தலைவர்; ரோஹித் ஷர்மாவுக்கு 200ஆவது போட்டியாகும். எனவே அவரை ரசிகர்கள் அதிகம் எதிர்பார்த்தனர். ஆனால் ரிஷி தவான் வீசிய முதல் ஓவரிலேயே ரோஹித் ஷர்மா டக் அவுட்டாகி வெளியேறினார்.




ஐ.பி.எல் தொடரில் அவர் டக் அவுட்டாவது இது 15ஆவது முறையாகும். இதன்மூலம் ஐ.பி.எல் வரலாற்றில் அதிகமுறை டக் அவுட்டான வீரர்களின் பட்டியலில் முதலிடத்திற்கு ரோஹித் ஷர்மா முன்னேறியுள்ளார். இவருடன் தினேஷ் கார்த்திக், மன்தீப் சிங் மற்றும் சுனில் நரைன் ஆகியோரும் 15 முறை டக் அவுட்டாகி முதலிடத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

# "ஆடல் வேள்வி 2023"























கொழும்பு கம்பன் கழகம் நான்கு நாட்கள் நடத்தும் "நிருத்தோற்சவம் 2023" 4ஆம் திகதி மாலை கொழும்பு இராமகிருஷ்ணா மிஷன் மண்டபத்தில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் தலைமையில் ஆரம்பமாகியது. நிகழ்வில் தொழில் அதிபர் மு. ஸ்ரீ காந்தா மங்கள விளக்கேற்றுவதையும் செல்வி அம்ரிதா கேதீஸ்வரன் கடவுள் வாழ்த்து இசைப்பதையும், கழக பெரும்தலைவர் தலைமையுரை ஆற்றுவதையும் சைவமங்கையர் வித்தியால நடன ஆசிரியர் பரதகலாவித்தகர் ஷாலினி வாகிஸ்வரன், நிர்த்தன நிர்ணய நடனப்பள்ளி ஆசிரியர் நாட்டியக்கலைமணி தயானந்தி விமலச்சந்திரன் ஆகியோரின் நட்டுவாங்கத்தில் இடம்பெற்ற நடன நிகழ்வையும், நடன நிகழ்வை அறிந்து வருகை தந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கான கௌரவத்தை பெரும்தலைவர் ஜெ. விஸ்வநாதன் வழங்குவதையும் கலந்து கொண்டோரையும் காணலாம்.

## வத்தளை, மாபொல, பங்களாவத்தை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழா

வத்தளை, மாபொல, பங்களாவத்தை அருள்மிகு ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் முதலாவது வருஷாபிஷேகம் கடந்த 30 ஆம் திகதி காலை நடைபெற்ற கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகியது. அன்று மாலை மாரியம்மன் ஆலய திருவிழாவும் நடைபெற்றது.

கடந்த 2ஆம் திகதி முதல் மாலை 4. 30 மணிக்கு அருள்மிகு ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விஷேட அபிஷேகங்களும் பூஜைகளும் நடத்தப்படுவதுடன் வசந்த மண்டப பூஜைகளும் நடத்தப்பட்டு அம்பாள் உள்வீதி வலம் வந்து அருள்பாலிக்கும் நிகழ்வும் இடம்பெறுகிறது. இந்நிகழ்வுகள் இவ்வாறு எதிர்வரும் 8ஆம் திகதி வரை நடைபெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை அஷ்டோத்திரசதா சங்காபிஷேகம், அபிஷேகம், பூஜை என்பன நடத்தப்படும். அன்று பிற்பகல் 2 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடத்தப்படும். அதனைத் தொடர்ந்து வண்ணமிகு தேரில் ஆரோகணித்து அம்பாள் வெளிவீதி வலம் வந்து அருள்பாலிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

ஆலயத்திலிருந்து புறப்படும் தேர், அல்பர்ட் பீரீஸ் மாவத்தை, பரணவத்தை, கெரவலப்பிட்டிய அதிவேக வீதி சந்தி வரை சென்று கெரவலப்பிட்டி 20 அடி வீதி சாந்தி வீதி, பங்களாவத்தை சாந்தி வீதி, எட்டபலம்வத்தை வழியாக மீண்டும் ஆலயத்தை வந்தடையும். எதிர்வரும் 10 ஆம் திகதி பால்குடபவனியும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 5 மணிக்கு திருவூஞ்வல் திருவிழாவும் பூங்காவனமும் நடைபெறும். 12 ஆம் திகதி மாலை 6 மணிக்கு வைரவர் மடை இடம்பெறும்.










## பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய வெசாக் கண்காட்சி கூடம்





*2023 ஆம் ஆண்டு "புத்த ரஷ்மி" வெசாக் தேசிய கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, கொழும்பு கங்காராமய விகாரைக்கு அருகாமையில், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் பாகிஸ்தான் கண்காட்சி கூடம் ஒன்றை அமைத்துள்ளது. இதன் ஆரம்ப கட்ட அங்குரார்பணத்தை 2023 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி திறந்து வைத்தார்.*

*பாகிஸ்தான் கண்காட்சி கூடத்தினை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உயர்மட்ட பிரமுகர்கள் பார்வையிட்டதோடு பாகிஸ்தான் தூதரகத்தின் 'பார்வையாளர்கள்' புத்தகத்தில் ஜனாதிபதி மற்றும் வெளியுறவு செயலாளர் ஆகியோர் கையெழுத்திட்டனர். மேலும், அனைத்து பார்வையாளர்களாலும் பாகிஸ்தானின் இம்முயற்சியானது பாராட்டப்பட்டது. பாகிஸ்தான் கண்காட்சி கூடமானது பாகிஸ்தானின் புத்த பாரம்பரியத்தை சிறப்பாக காட்சிப்படுத்துகிறது.*

*உண்ணாவிரத நிலை புத்தர் சிலைகள், பிரச்சார நிலை புத்தர் சிலைகள், தியான நிலை புத்தர் சிலைகள் மற்றும் பாகிஸ்தான் காந்தார நாகரிகத்திற்கு சொந்தமான பல கலைப்பொருட்களின் பிரதிகள் ஆகியவை இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும், பல தசாப்தங்களாக அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட 2500 ஆண்டுகள் பழமையான பௌத்த தொல்பொருள் இடங்களின் புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. 2023 ஆம் ஆண்டானது, பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆவது ஆண்டைக் குறிக்கும் நிலையில் இந்த ஆண்டு வெசாக் பண்டிகை கொண்டாடப்படுவது இரு நட்பு நாடுகளின் உறவுகளை மேலும் வலுப்படுத்தப்படுகிறது.*

*கொழும்பு சிட்டி சென்டர் வளாகத்துக்கு அடுத்ததாக அமைந்துள்ள பாகிஸ்தான் கண்காட்சி கூடமானது மே மாதம் 5 முதல் 7 வரை தினமும் இரவு 7:00 மணி முதல் நள்ளிரவு 12:00 மணி வரை பொதுமக்களின் பார்வைக்காக திறந்திருக்கும்.*